உதயன்
பக்கங்கள்
யாழ். - 30/=
வன்னி - 20/=
மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04
சுடர்: 29 கதிர்: 313 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 19, ஞாயிறு 05.10.2014
stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



ரெய்னா ருத்ரத் தாண்டவம்

பக்கம் 27

# வாய்ப்பை தவறவிட்டுவிட்டு பின்பு வருத்தப்படக்கூடாது

## சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க கோருகிறார் சிரேஷ்ட சட்டத்தரணி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5
சர்வதேச விசாரணைக்கான சந்தர்ப்பத்தை நாம் சரிவரப் பயன்படுத்த வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் சாட்சியமளிக்கவேண்டும். இதனைத் தவறவிட்டால், வாழ் நாள் முழுவதும் எங்கள் தலைமுறை வருத்தப்படவேண்டிவரும் என்று சிரேஷ்ட சட்டத்தரணியும், மனித உரிமை ஆர்வலருமான க.ச.இரத்தினவேல் தெரிவித்தார்.
மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 76 ஆவது பிறந்த நாள் நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே இரத்தினவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
குமார் பொன்னம்பலத்தின் நினைவுநாள், யாழ்.நகரில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, 'ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணையும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் சட்டத்தரணி இரத்தினவேல் நினைவுப் பேருரையை வழங்கினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய நாடுகள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணை என்பது, சமூகத்துக்கு விடியலைக் கொடுப்பதற்கான சந்தர்ப்பம். அதனை வீணாக்காமல் நன்கு உபயோகப்படுத்த வேண்டும். வராது வாய்த்த இந்த வாய்ப்பு இப்போது பயன்படாவிட்டால் வாழ் நாள் முழுவதற்கும் எங்

25 ஆம் பக்கம் பார்க்க



சட்டத்தரணி இரத்தினவேல்

### நீதிமன்ற உத்தரவின்றி புதைக்கப்பட்ட சடலம் மீட்பு



மன்னார், ஒக் 5
மன்னார் நீதிமன்றம் உத்தரவிடாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சடலம் மன்னார் நீதிவானின் உத்தரவுக்கு அமைய நேற்றுச்

25 ஆம் பக்கம் பார்க்க

வரையுங்கள் கார்ட்டூன்
வரைந்ததை அனுப்பி வையுங்கள்
தரம் கண்டு பிரசுரிப்போம்



வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசியலை அரசியலாகவே பார்க்கும் தலைமையே வேண்டும் தமிழருக்கு

### சட்டத்தரணி புவிதரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 05
அரசியலுக்குள்ளேயே சட்டம் அடங்குகின்றது. சட்டத்தினுள் இருந்து கொண்டு அரசியலை அணுகக் கூடாது. அரசியலை அரசியலாகவே பார்க்கின்ற அரசியல் தலைமையே தமிழ் மக்களுக்குத் தேவை என்று சட்டத்தரணி புவிதரன் தெரிவித்தார்.
மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 76 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள், யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
குமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் இக்கட்டில் மாட்டிக் கொண்டிருந்த சமயத்தில், தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பைத் தானாகவே ஏற்றுக்கொண்டார். ஆயுத அரசியலுக்குச் சமாந்தரமாக இன்னொரு அரசியல் இருக்கின்றது என்பதன் அடிப்படையில் அவர் செயற்பட்டார். அத்துடன் தனது திறமையால், ஆயுத அரசியலின் நியாயப்பாட்டைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்தியம்பினார்.
எமது தமிழ் அரசியலின் துர

25 ஆம் பக்கம் பார்க்க

## டெல்றொக்ஷனின் சாவு குறித்த மனுவை விசாரிப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஒக். 5
2012ஆம் ஆண்டு வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல்களின்போது கொல்லப்பட்ட மரியதாஸ் டெல்றொக்ஷன் என்னும் கைதியின் சாவு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
இந்த வழக்கை ஏற்கக்கூடாது என்று அரச தரப்பினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகளை நீதிமன்றம் நிராகரித்தது.
மரியதாஸ் டெல்றொக்ஷனின் பெற்றோர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை விசாரிப்பதற்கு, பிரியசாத் டெப் உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு அனுமதி அளித்தது.
மனு அழைக்கப்பட்டபோது ஆட்சேபணைகளை முன்வைத்த அரசதரப்பு வழக்குரைஞர், சிறைச்சாலை கலவரத்தை முறியடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதே குறித்த கைதி உயிரிழந்ததாகக் கூறினார்.
இந்த நடவடிக்கையின்போது எந்தவொரு கைதியும் இலக்கு வைத்துத் தாக்கப்படவில்லை என்றும் பாதுகாப்புப் படையினர் சட்டத்துக்கு அப்பால் சென்று தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கவில்லை என்றும் அரச தரப்பு வழக்குரைஞர் தெரிவித்தார்.
எனவே, இந்தச் சாவு தொடர்பில் அரசு பொறுப்புக்கூற முடியாது என்றும் அதனால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் அரச தரப்பில் வாதிடப்பட்டது.
ஆனால், இந்த வாதத்தை மறுத்துரைத்த மனுதாரர்கள் தரப்பு வழக்குரைஞர், அரசின் பாதுகாப்புப் படையினர் சட்டத்துக்கு அப்பால் சென்று தங்களின் அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளதாகக் குற்றம் சாட்டினார்.
இதுபற்றி கருத்து தெரிவித்த, அரசியல் கைதிகளை விடு

25 ஆம் பக்கம் பார்க்க

### மிதிவெடியில் ஒருவர் காயம்

பளை, ஒக் 5
பளை, வேம்பொடுகேணிப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி மிதிவெடி அகற்றும் பணியாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை 4.45 மணியளவில் இடம்பெற்றது.

25 ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் சேவை அடுத்த வருடம்

### வடக்கு ரயில் சேவை அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஒக்.5
வடமாகாணத்துக்கான ரயில் சேவைகள் அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும். அத்துடன் தலைமன்னார் – இராமேஸ்வரத்துக்கான கப்பல் சேவை அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என்று இந்தியாவின் இர்கொன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குப்தா தெரிவித்தார்.
வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிடுவதற்காக தெற்கு ஊடகவிய

25 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் உள் விவகாரத்தில் சர்வதேசம் தலையிடக் கூடாது

### அடித்துக் கூறுகிறார் மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக். 05
இலங்கையின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யும் உரிமை சர்வதேச சமூகத்துக்குக் கிடையாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இலங்கையின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்குச் சில நாடுகள் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் முற்றாக மறுதலித்ததுடன், தமது நிலைப்பாடு மாறவில்லை என்பதை தெரி

25 ஆம் பக்கம் பார்க்க

## மாதகலில் சிக்கிய 45 கிலோ தங்கம் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக்.5
மாதகல் கடலில் கடற்படையிடம் சிக்கிக் கொண்ட 45 கிலோ தங்கக் கட்டிகள் நேற்றுப் பலத்த பாதுகாப்புடன் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.
மாதகல் கடல் ஊடாக இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட சமயம் கடற்படையினரால் இந்தத் தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டன.
கடற்படையிடம் சிக்கிய தங்கக் கட்டிகளும், இதனைக் கடத்த முற்பட்ட இருவரும் யாழ்.பிரதம தபாலகத்தில் இயங்கும் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

25 ஆம் பக்கம் பார்க்க

## தங்கக் கடத்தலில் ஈடுபட்டால் உடனடியாக நிறுத்திவிடுங்கள்

### யாழ். வர்த்தகர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம்.ஒக்.5
இலங்கையில் இருந்து அண்மைக் காலமாக இந்தியாவுக்குத் தங்கம் கடத்தும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதால் யாழ்ப்பாணத்தின் நகைக் கடை உரிமையாளர்கள் அவதானத்துடன் இருக்குமாறும், அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தால் அதனை உடனடியாக நிறுத்துமாறும் யாழ்.வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடை உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். வர்த்தகர் சங்கத்தில் நடைபெற்றது.

25 ஆம் பக்கம் பார்க்க

## வந்தது திடீரென வடதாரகை ஜனாதிபதி மஹிந்தவுக்காக

யாழ்ப்பாணம், ஒக். 05
ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, நெடுந்தீவுக்கு அடுத்த வாரம் செல்லவுள்ள நிலையில், ஒரு வருட காலமாக யார் கண்ணிலும் படாமல் ஓய்வில் நின்ற வடதாரகைப் படகு நேற்றையதினம் திடீரென குறிகாட்டுவான் துறைமுகத்துக்குக் கடற்படையினரால் கொண்டு வந்து விடப்பட்டுள்ளது.
குறிகாட்டுவான் – நெடுந்தீவுக்கு இடையில் கடல் வழிப் போக்குவரத்துக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் குமுதினிப் படகு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் படகினூடான பயணம் மக்கள் ஆபத்தாக இருக்கின்றமையினால் இரண்டு வருடாங்களுக்கு முன்னர் வடதாரகை படகு குறிகாட்டுவான் – நெடுந்தீவு பயணத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.
ஆனாலும் துறைமுகம் ஆழம் இல்லை என்று சொல்லியும், குறித்த படகைச் செலுத்துவதற்குத் தகுதி வாய்ந்த மாலுமிகள் இல்லை என்று தெரிவித்தும், படகு வந்த வேகத்தில்

25 ஆம் பக்கம் பார்க்க

# ஜெயலலிதாவை தமிழக சிறைக்கு மாற்றுவதற்கு கர்நாடகம் முயற்சி

## அ.தி.மு.க தொண்டர்கள் அங்கு குவிவதால் சிக்கல்

புதுடில்லி, ஒக்.5

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை கர்நாடக சிறையில் வைத்திருப்பதில் பெரும் குடைச்சலில் இருக்கிறது கர்நாடக அரசு. பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவை தமிழகச் சிறைக்கு மாற்ற கர்நாடகம் விரும்புகிறது.

சொத்துக்குவிப்பு தொடர்பான வழக்கின் தீர்ப்புக்காக பெங்களூர் சென்ற ஜெயலலிதா, நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, அங்கேயே சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அவர் அடைக்கப்பட்ட மத்திய சிறைச்சாலை வளாகத்திலும், சிறைச்சாலையைச் சுற்றிலும் அ.தி.மு.க தொண்டர்கள் பெருமளவில் நாள்தோறும் குவிந்து வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் நீதிமன்றமும் மாநில அரசும் திணறிவருகின்றன. இந்த நிலையில் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதால், மாநில ரிசாவ் பொலிஸ் படைகொண்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அமைச்சர்கள், அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் என பெங்களூருக்குச் சென்று அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதாவைச் சந்திக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், ஏதோ நெருக்கடி காரணமாக, அவர்களைச் சந்திப்பதை ஜெயலலிதா தவிர்த்து வருகிறார்.

இந்நிலையில், கர்நாடக மாநில ஆளும் காங்கிரஸ் கட்சியின் அமைச்சர் ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் - இது மிகவும் உணர்ச்சிகரமான விவகாரம். சென்ற வாரம் தமிழக வழக்குரைஞர்கள், அ.தி.மு.க. தொண்டர்கள் பல இடங்களில் கர்நாடக அரசுக்கு எதிராக இங்கே பல போராட்டங்களை நடத்தினர். ஜெயலலிதாவின் பிணை மனு விசாரணையில் தாமதம் ஏற்படுத்துவதாக எங்கள் மீது குற்றம் சாட்டியுள்ளனர். அவருக்கு 4 வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டதில் இருந்து நாங்கள் தேவையற்ற பிரச்சினைகளை இதுவரை சந்திக்காத வகையில் இப்போது சந்தித்து வருகிறோம். எங்கள் மாநிலத்தில் இது போன்ற பிரச்சினை ஏற்படுவதை நாங்கள் விரும்பவில்லை. ஜெயலலிதா தமிழக சிறைக்கு மாற்றப்பட்டால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.



உடல் நலக் குறைவு காரணமாக அவருக்கு சிறை நிர்வாகம் மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது. ஜெயலலிதா விருப்பப் படி, முதலில் ஓரிரு நாள்கள் வீட்டில் சமைக்கப்பட்ட உணவை வழங்கிய போதும், சிறை நிர்வாக விதிகளைக் காரணம் காட்டி அது மறுக்கப்பட்டுள்ளது. இதுவும் கர்நாடக அரசின் மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சிறை நிர்வாகத்தின் செயல்கள் தங்களுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறும் அந்த அமைச்சர், ஜெயலலிதாவுக்கு வீட்டில் சமைக்கப்பட்ட உணவு வழங்குவதற்கு விமர்சனம் எழுவதால், அதற்காக நாங்கள் அவருக்குச் சிறை உணவையே வழங்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறினால், அதனால் எழும் அரசியல் ரீதியான நெருக்கடியை நாங்கள் சந்தித்தாக வேண்டும் - என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே காவிரி நதி நீர் பங்கீடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கர்நாடக அரசின் மீது அதிருப்தியில் உள்ளது தமிழகம். இந்த நிலையில் மேலும் இரு மாநிலங்களுக்கு இடையில் பிரச்சினைகள் புதிதாக உருவாவதை கர்நாடகம் விரும்பவில்லை என்கிறார் அந்த அமைச்சர்.

எதிர்வரும் 7ஆம் திகதி ஜெயலலிதா சார்பிலான பிணை மனு விசாரணைக்கு வருகிறது. இந்த நிலையில், நீதிமன்ற நடைமுறைகளை மாநில அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. பிணை மீதான நீதிமன்ற உத்தரவில் ஏதேனும் விபரீதமான முடிவு எழுந்தால், நிச்சயமாக மத்திய அரசுக்கு கர்நாடக அரசு கடிதம் எழுதி, ஜெயலலிதாவை தமிழக சிறைக்கு மாற்றச் சொல்லி கேட்டுக்கொள்ளும் என்று தெரிகிறது. (த)

# ஜெயாவை விடுதலை செய்யக்கோரி 2,000 ஈழ அகதிகள் உணவு தவிர்ப்பு

சென்னை, ஒக்.5

தமிழக முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க பொதுச்செயலாளருமான ஜெ.ஜெயலலிதாவை விடுதலை செய்யக் கோரி கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் சுமார் 2ஆயிரம் ஈழத் தமிழர்கள் ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுச் சனிக்கிழமை நடத்தினர்.



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை விடுதலை செய்யக் கோரியும், அவருக்கு எதிராக விதிக்கப்பட்ட தீர்ப்பைக் கண்டித்தும் தமிழகமெங்கும் அ.தி.மு.க.வினர் உணவு தவிர்ப்பு, மனித சங்கிலி போன்ற போராட்டங்களை நடத்தி வரும் நிலையில், கும்மிடிப்பூண்டி பெத்திக்குப்பத்தில் உள்ள இலங்கை தமிழர் அகதிகள் முகாமில் இந்த உணவுதவிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்த உணவு தவிர்ப்பில் கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த 948 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டு தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை விடுதலை செய்யக் கோரி கோஷங்கள் எழுப்பினர்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இலங்கை அகதிகள் முகாம் தலைவர் கணேசன், துணை தலைவர் வேதநாயகம், செயலாளர் சுந்தர்ராஜன், பொருளாளர் நாதன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். முகாமில் கும்மிடிப்பூண்டி ஒன்றிய அ.தி.மு.க செயலாளர் கோபால் நாயுடு, நகர செயலாளர் மு.க. சேகர், ஊராட்சி மன்ற தலைவர் கே.எம்.எஸ்.சிவகுமார் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். (த)

# மோடியின் விமானத்தில் குண்டு



புதுடில்லி, ஒக்.5

பிரதமர் மோடி அமெரிக்காவுக்குச் சென்ற விமானத்தில் செயழிலந்த நிலையில் இருந்த வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மோடி சமீபத்தில் அமெரிக்கா சென்றபோது டில்லியில் இருந்து மும்பை, ஐதராபாத் வழியாக ஜித்தா சென்ற விமானத்தின் ஒரு பகுதியில் இருந்து செயல்பாடற்ற நிலையில் இருந்த வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜித்தாவில் விமானம் தரையிறக்கப்பட்ட உடன் இந்தத் தகவலை இந்திய விமான அதிகாரிகள், ஜித்தா பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஜித்தா விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த விமானம் விரைவில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட உள்ளது.

குறித்த தகவலை அறிந்த இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (த)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்திரிகா, ரணில் முக்கிய பேச்சு

கொழும்பு, ஒக். 5

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதத்தில் இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் பல முக்கிய பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையே லண்டனில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.



இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி வேட்பாளராக தான் போட்டியிடுவதும், பிரதமர் வேட்பாளராக ரணில் போட்டியிடுவதுமே பொருத்தமானது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, இடதுசாரி தலைவர்களான வாசுதேவ•நாணயக்கார, டியூ.குணசேகர, திஸ்ஸ விதாரண மூவரும் கூட்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஜனாதிபதி தேர்தலை பிற்போடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பின்போது இவர்கள் அரசமைப்பில் மாற்றத்தை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர். (த-சி)

# பாப்பரசரின் வருகையை பிற்போடக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.5

பாப்பரசரின் இலங்கை பயணத்துக்கு முன்னர் அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதால், தமது வருகையைப் பிற்போடுமாறு பாப்பரசர் பிரான்ஸிஸிடம் நீதியான சமூகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாப்பரசரின் வருகைக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதனூடாக இலங்கையரின் ஜனநாயக உரிமை மீறப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் இடம்பெறும் காலப் பகுதிக்குள் பாப்பரசரின் இலங்கை பயணம் அமைவது, இலங்கையிலுள்ள கிறிஸ்தவ மக்களது வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமையும் என்றும் நீதியான சமூகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீதியான சமூகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாப்பரசருக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது என சட்டத்தரணி ஷிரால் லக்திலக தெரிவித்தார்.



பாப்பரசரின் இலங்கை பயணம் ஜனவரி மாதம் 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளில் அமையவுள்ளது. இந்நிலையில், ஜனவரி மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என ஷிரால் லக்திலக தெரிவித்தார். (த-சி)

# இலங்கைச் சிறுமி தமிழகத்தில் துஷ்பிரயோகம்

சென்னை, ஒக். 5

தமிழ்நாடு இலங்கை அகதிகள் முகாமில் 5 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கல்லூரி மாணவர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

சின்னப்பள்ளிக்குப்பம் அகதிகள் முகாமைச் சேர்ந்த எஸ். பிரிட்டன் (வயது -18) என்ற இளைஞர் மாலை நேரத்தில் கல்வி கற்பித்து வருகிறார். அவரிடம் கல்வி கற்கச் சென்ற சிறுமியையே அவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படுகின்றது. சிறுமியின் தாயார் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி வேலூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த)

## விபத்து

இறம்பைக்குளம்

### மோ.சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் படுகாயம்

வவுனியா, ஒக் 5

வவுனியா இறம்பைக்குளம் வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர்படுகாயம் அடைந்தநிலையில் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா இறம்பைக்குளம் வீதியில் வவுனியா நகரத்தில் இருந்து இறம்பைக்குளம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் இரு மோட்டார் சைக்கிளையும் செலுத்திய இருவரும் படுகாயம் அடைந்து வவு னியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் புள்ளிவிபர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எஸ்.புஸ்பதரன் (வயது - 29), வவுனியாவை சேர்ந்த என். சுபசிங்க ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-421-402)

கொடிகாமம்

### விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஒக்.5

கொடிகாமம் நகர்ப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து நேற்று இடம்பெற்றது. காயங்களுக்கு இலக்கான கெற்பேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி முத்துலிங்கம் (வயது-52) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

# மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கு பொத்துவிலில் படையினர் தடை

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

பொத்துவில், ஒக் 5

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள கூனப்பங்கேணிக்கு அருகாமையில் உள்ள ஊற்றுச்சேனை என்னும் இடத்தில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள இடத்தைத் துப்பரவு செய்து கொண்டு இருந்தபோது அங்கு இராணுவத்தினர் நுழைந்து அதனைத் தடுத்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

60 ஆண்டு காலத்துக்கும் மேலாக அந்த இடத்திலே தமிழர்கள் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளதுடன் அந்த நிலத்தை பராமரித்தும் வருகின்றார்கள். ஆனால் நேற்று முன்தினம் அவர்கள் அந்த இடத்தைத் துப்பரவு செய்து கொண்டிருந்தபோது இராணுவத்தினர் அங்கு வந்து அதனைத் தடுத்து நிறுத்தியமை அந்த மக்களுக்கு மிகுந்த வேதனையை கொடுத்திருக்கின்றது.

இந்த நாட்டிலே சிவில் நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்று கூறும் அரசு ஏன் இராணுவத்தினரைப் பயன்படுத்தவேண்டும்.

இதற்கான காரணம் எமது மக்களை அச்ச நிலைக்கு உட்படுத்தி அவர்களின் முன்னகர்வுகளைத் தடுத்து நிறுத்துவது தான். அவர்களின் உள்நோக்கமாக இருக்கின்றது என்பதனை உணர முடிகிறது.

அந்த இடத்தில் உள்ள காணிகள் முறையற்ற விதத்தில் சுவீகரிக்கப்படுவதாக தாங்கள் அறிந்தால் சிவில் நிர்வாகத்தைப் பயன்படுத்தி அந்தப் பிரச்சினையைக் கையாள முடியும். அதைவிடுத்து இராணுவத்தினரைக் கொண்டு அந்த மக்களை அந்த இடத்தில் இருந்து வெளியேறுமாறு வற்புறுத்துவது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

இவ்வாறுதான் தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருக்கும் காணிகள் மாற்று இனத்தவர்களினால் சுவீகரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது- என்றார். (த)

## நாளைய வழக்குகள் திகதி மாற்றம்

தென்மராட்சி, ஒக்.3

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கள்கிழமை அரச பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து அந்தத் தினத்தில் நீதிமன்றங்களில் தவணையிடப்பட்ட வழக்குகள் அனைத்தும் வேறு ஒரு தினத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் எதிர்வரும் 6ஆம் திகதி தவணையிடப்பட்ட அனைத்து வழக்குகளும் டிசெம்பர் 8 ஆம் திகதி அழைக்கப்படுமென நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கள்கிழமை அரச பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து வழக்குகள் டிசெம்பர் 8 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (த-9)

## தேங்காய் குலை தலையில் விழுந்ததில் சிறுவன் சாவு

கொழும்பு, ஒக் 5

குருநாகல், மீரிகம விகாரையில் நடத்தப்படும் சிறுவர் பள்ளியில் கல்வி பயிலும் சிறுவர்களில் இருவரின் தலையில் 9 தேங்காய்கள் அடங்கிய குலை விழுந்துள்ளது.

இதில், சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன் மற்றுமொரு சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

படுகாயமடைந்த சிறுவன் குருநாகல் வைத்தியசாலையின் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## இ.தொ.க. உறுப்பினரின் வாகனம் விபத்து

கொழும்பு, ஒக் 5

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் சென்ற கப் ரக வாகனம் நல்லதண்ணி லக்ஷபான தோட்டத்துக்கு அண்மித்த பகுதியில் வீதியை விட்டு விலகி நேற்று விபத்துக்குள்ளானதாக நல்லதண்ணிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியாவிலிருந்து நல்லதண்ணி நோக்கி பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதி வழுக்கியதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டதாகவும், இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)



உலகத் தமிழர் ஆராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவுத் தூபியும் வர்ணம் தீட்டி மெருகூட்டப்பட்டது. ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ். முற்றவெளியில் உள்ள வீரசிங்கம் மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மண்டபத்துக்கு நேர் எதிரே உள்ள உலகத் தமிழர் ஆராய்ச்சி மாநாட்டு நினைவுத் தூபியும் கடந்த வெள்ளிக்கிழமை இரவிரவாக வர்ணம் தீட்டி மெருகூட்டப்பட்டுள்ளது. (த-17)

## புதையல் தோண்டியோர் வவுனியாவில் சிக்கினர்

வவுனியா, ஒக் 5

வவுனியா மாமடுவ வாவிப் பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூவரை மாமடுவப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா மாமடுவ வாவிப் பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருப்பதை அவதானித்த அப்பகுதியை சேர்ந்த சிலர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த மாமடுவப் பொலிஸார் புதையல் தோண்டும் பணியில் ஈடுபட்ட மூன்று பேரைக் கைது செய்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (த-402)

## ஜனாதிபதியின் வருகைக்காக நெடுந்தீவில் கடும் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ளதையொட்டி அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படவுள்ளன.

கரையோரப் பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்களின் விவரங்களும் படையினரால் சேகரிக்கப்படுவதுடன் சிரமதான வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நெடுந்தீவில் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம், நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் ஆகியவற்றை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். ஜனாதிபதியின் வருகையையொட்டிய ஏற்பாடுகளைப் பார்வையிடும் பொருட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இராணுவத் தளபதி நெடுந்தீவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியதாகவும் தெரியவருகின்றது. (த-7)

## மாவனல்லையில் வான் கடத்தல் மூன்று பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக் 5

மாவனல்லையில் வைத்து கடத்தப்பட்ட வான் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், வான் கடத்தலுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் மூவரைக் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்வதற்காக செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி, வாகனங்கள் திருத்தும் நிலையத்திலிருந்து வாடகைக்குப் பெறப்பட்ட வானை, மாவனல்லைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீழ்கடுகண்ணாவையில் வைத்து இருவர் கடத்திச் சென்றுள்ளனர்.

வானின் சாரதியை ஏமாற்றியே சுமார் 55 இலட்சம் பெறுமதியான வானை அவ்விருவரும் கடத்திச்சென்றுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

## மோ.சைக்கிளை ஓட்டியபோது ஆசனப்பட்டி அணியவில்லை

### காலி வாசிக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஒக் 5

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றபோது ஆசனப் பட்டியை அணியாமல் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுப் பொலிஸாரினால் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் காலியில் இடம்பெற்றுள்ளது.

காலி, ஹவுல்பே பதுவத்தையைச் சேர்ந்த பிரீத் சிசிர குமாரவுக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றத்துக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறே அந்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த அழைப்பாணையின் பிரகாரம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலி மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகனச் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றத்துக்காக தனக்கு 2ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது என்றும் அந்த தண்டத்தை மே மாதமே தான் செலுத்திவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)

## ஜனாதிபதித் தேர்தலை பிற்போடக் கோரிக்கை

### இடதுசாரித் தலைவர்கள் விடுத்தனர்

கொழும்பு, ஒக் 5

ஜனாதிபதி தேர்தல் ஜனவரி மாதத்தில் இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ள நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் பல முக்கிய பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.

இடதுசாரி தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ.குணசேகர, திஸ்ஸ விதாரண மூவரும் கூட்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பின்போது இவர்கள் அரசமைப்பில் மாற்றத்தை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர்.

இதேவேளை - ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ,ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையே லண்டனில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி வேட்பாளராக தான் போட்டியிடுவதும், பிரதமர் வேட்பாளராக ரணில் போட்டியிடுவதுமே பொருத்தமானது என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார் எனத் தெரியவருகின்றது. (த)

## இந்திய மீனவரின் சடலம் நேற்று யாழில் அடக்கம்

யாழ்ப்பாணம்.ஒக்.5

நெடுந்தீவுக்கடற்பரப்பில் மீட்கப்பட்ட இந்திய மீனவரின் சடலம் உறவினரின் அனுமதியுடன் நேற்று யாழ்.வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபையின் சேமக்காலையில் அடக்கம்செய்துவைக்கப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதம் மீன்பிடிக்க வந்த இராமேஸ்வரம் மீனவர்கள் நால்வரது படகு கவிழ்ந்துநடுக்கடலில் 3மீனவர்கள் காணாமல்போன நிலையில்ஞானப்பிரகாசம்(வயது-40) என்பவரது சடலம் நெடுந்தீவில் கரை யொதுங்கியுள்ளது.

கடந்த மாதம் 6 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட மீனவரை அடையாளம் காணுமாறு உறவினர்களுக்குத் தகவல் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் உறவினர்கள் இலங்கையில் சடலத்தை அடக்கம் செய்யுமாறு தெரிவித்ததை அடுத்து யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தினால் சடலம் அடக்கம் செய்து வைக்கப்பட்டது. (த-14)

## போலி 500 ரூபா நாணயத் தாளுடன் புதுக்குடியிருப்பில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஒக் 5

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் தனது கப் ரக வாகனத்துக்கு எரிபொருளை நிரப்பிக்கொண்டு 500 ரூபா போலி தாள்கள் இரண்டை வழங்கியதாகக் கூறப்படும் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான ஒருவரையே நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், அவரிடமிருந்து 500 ரூபா போலி தாளொன்றையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்தனர். (த)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலய மாணவியான

**சுதாகரன் சுவர்னா**

அவர்கள் 2014 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் 162 புள்ளிகள் பெற்றமையையிட்டுப் பாராட்டுகின்றோம். அவர் மேன்மேலும் உயர்சித்தி பெற்று வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
சிறியதகப்பன் மகிதரன்
(ஆஸ்திரேலியா)

(52913)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மறவன்புலோ மத்தியைச் சேர்ந்த

**நவநீதன் கஜனன்**

அவர்களை பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பரீட்சைகளில் சித்தி பெறவும் வாழ்த்துகின்றோம்.

அயல் அன்பர்கள்.

## தேவை

### ஆண்கள் விடுதிப் பொறுப்பாளர்

திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லத்தின் ஆண்கள் விடுதியை நிர்வகிப்பதற்கு பொறுப்பாளர் ஒருவர் உடனடி யாகத் தேவைப்படுகிறார்.

திடகாத்திரமான 50 வயதிற்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புகள் குறைந்த தலைமைத்துவப் பண்புகளும் வழிகாட்டற்திறனுமுள்ள சைவ போசனம் கைக்கொள்ளும் இந்து ஆண்கள் விரும்பப்படுவர்.

ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர், அரச அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உணவு மற்றும் உறைவிடம் என்பன இலவசமாக வழங்கப்டும்.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கலாம்.

எழுத்து மூல விண்ணப்பங்கள் பணிப்பாளர், சிவன் அருள் இல்லம் திருக்கேதீச்சரம் எனும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தில் தங்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க - 0232050804 0716201870



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

உதிப்பு
10 . 04 . 1991

மறைவு
22 . 08 . 2014

**செல்வன் வைத்திலிங்கம் கஜிநாத்**

கனவுகள் பல சுமந்து
சாதனை படைத்திடும் வேளைதனில்
கண்ணிமைக்கும் நேரத்தில்
விண்ணுற்றாய் கஜிநாத்
உனக்காய்க் கண்ணீர்ப் பூக்கள் சிந்திக்
கவலையோடு வாடுகின்றோம்
என்றென்றும் உன் நினைவை ஏற்றிவைப்போம்

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

சுபாஸ் மின் ஒப்பந்தகாரரும்
சக ஊழியர்களும்.

(52909)(10)




உள்நாடு வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

**திருமுருகன் கொம்நெற்**

இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

விஸாவுக்கான விண்ணப்பங்களினை எமது அனைத்து கிளைகளிலும் அனுப்பிக்கொள்ளலாம்.

## கலை விழா இன்று

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான மாபெரும் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மன்றத்தின் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் காசிநாதன் நிருபா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(த)

## ராமேஸ்வரத்தில் கரையொதுங்கிய மர்மப் படகு

ராமேஸ்வரம், ஒக். 5

ராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் மர்மமான முறையில் இலங்கைப் படகு ஒன்று நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு கரையொதுங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராமேஸ்வரத்தை அடுத்துள்ள தங்கச்சிமடம் தென்கடல் பகுதியில் நேற்று முன் தினம் இரவு மர்மமான முறையில் பிளாஸ்ரிக் படகு ஒன்று கரைஒதுங்கி இருப்பதாக உளவுப்பிரிவு, கி.யூ.பிரிவு மற்றும் தமிழக கடலோரக் காவல் படைக்குத் தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று மர்மப் படகு குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப்படகில் அதிவேக குதிரைவலு இயந்திரம், மீன்பிடிவலை மற்றும் டீசல் என்பன இருந்தன. இந்தப் படகில் தீவிரவாதிகள் வந்தனரா, அல்லது அகதிகளை ஏற்றிச் செல்ல வந்ததா, கடத்தல் பொருள்களை எடுத்துச்செல்ல வந்ததா என்ற கோணத்தில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் காணப்பட்டது.

(த)

## கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு இடையூறு

முல்லைத்தீவு, ஒக .5

முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்பிராந்தியத்தில் திடீர் சுற்றி வளைப்புக்குச் சென்ற கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு விளைவித்த சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கொக்கிளாய்க் கடலில் சட்டவிரோதமான முறையில் தடைவிதிக்கப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சிலரைக் கைது செய்ய சென்ற போதே இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கைது செய்யப்படுவதை எதிர்த்து வேறு சிலர் எதிர்ப்பு வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஏற்பட்ட நிலையை கட்டுப்படுத்துவதற்கு முல்லைத்தீவு பொலிஸாரும் அழைக்கப்பட்டனர்.

தமது பணிகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பாக முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முல்லைத்தீவு பொலிஸில் முறைப் பாடு ஒன்றையும் செய்துள்ளனர்.

(த)

## தரம் 5 புலமைப் பரிசில் பாராட்டும் 10ஆவது பிறந்த தின வாழ்த்தும் 05.04.2014



செல்வன்

**தனரஞ்சன் தர்சஜன்**

(யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

தரம் 5 புலமைப்பரிசில் 2014 பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு இவரை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

செல்வன் த.தர்சஜனின் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ஐயா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பாட்டி, அன்ரிமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், மச்சான்,
செல்வம் மில் ஒழுங்கை,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

Best Wishes



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் உதவி அமுலாக்கல் அலுவலராகப் பணிபுரியும் சி. அனிதா அவர்களின் பாசமிகு தந்தை

**கிருஷ்ணர் சண்முகராசா**

அவர்கள் 03.10.2014 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டுத் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளர், அலுவலகப் பொறுப்பதிகாரி,
சக உத்தியோகத்தர்கள், பிராந்தியக் காரியாலயம்,
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை, யாழ்ப்பாணம்.

## அக்ஷயா

பேசியல், மேக்கப், ஹெயாஸ்டைல், சாறிபிளவுஸ் கட்டிங் மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. உடன் தொடர்புகொள்ளவும்.

★ பருக்கள், நாட்பட்ட பருக்கள், வடுக்கள், காயங்கள், மஞ்சள் கரும்புள்ளிகள், கடும்கறுப்பு, கழுத்து கறுப்பு பிறப்பிலே கறுப்பு அனைத்தையும் மாற்றும் 'ஒரிஜினல் வைத்நிங்' கிறீம் விற்பனைக்கு உண்டு. உடல் எடை கூட்டும், குறைக்கும் குளிசை, பால் மா, கோப்பி, தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய் என்பன விற்பனைக்கு உண்டு.

அக்ஷயா, (52908)(10)
தொடர்புகளுக்கு: 0772 106 155
221, நாவலர் றோட், (பிறவுண் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## Admissions - 2015

Application forms available at the school office for the nursery, Grades One, Six, Seven & Eight.

**Closing Date: October 31, 2014**

*Principal*
*Uduvil Girls' College.*

(C/16919)(10)

## கண்ணீர் அஞ்சலி



30.09.2014 அன்று கனடாவில் சிவபதமடைந்த

திருமதி **மீனாட்சிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

(ஓய்வுநிலை ஆசிரியை)

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தெருவாரம் விஸ்வாம் தோட்ட பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

மைத்துனர்: மு. வேலுப்பிள்ளை
உடன்பிறவா சகோதரி: பாக்கியம்

## மரண அறிவித்தல்



**ஜெனார்த்தனன் அச்சுதன்**

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவன் உயிரியல் பிரிவு 2012)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோகுல மஹால் புடவைக்கடை உரிமையாளர் ஜெனார்த்தனன் - சிவமலர் தம்பதிகளின் புதல்வன் அச்சுதன் (03.10.2014) வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இராசரத்தினம் - பூமலர் தம்பதியரின் அன்புப் பேரனும், சாமினி - பகீரதன் (லண்டன்), ஜெயகௌரி - கஜன் (லண்டன்) ஆகியோரின் மருமகனும், ஜெயந்தனின் (ஜெயலட்சுமி புடவைக் கடை உரிமையாளர்) பெறாமகனும், சிவபாதசுந்தரம், சிவபாக்கியம், சிவமணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (52911)

தகவல்: குடும்பத்தினர்.
ஜெனார்த்தனன் (கோகுல மஹால் புடவைக்கடை உரிமையாளர்)

## அப்பாவைத் தேடுகின்றேன்



அன்புள்ள அப்பா உங்களைப் பிரிந்து 03 ஆண்டுகள் ஆகியும் காணாமையால் தவிக்கிறேன். நீங்கள் எங்கே இருந்தாலும் உடனே என்னைத் தேடி வாருங்கள் அப்பா.
எனது தொடர்புக்கு: 077020 9512

கைலாயதுரை கிருபாகரன்
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.



கிருத்திகா கிருபாகரன்
(57814)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்
செல்வன் கு.நிகேசன்
2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சித்திகள் பெற்று வாழ நயினை நாகபூஷணி அம்பாளை வணங்கி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துபவர்கள்:
மாமா K.K.நாதன், மாமி தேவி,
அப்பப்பாமார், அப்பம்மாமார்.

15/2, மாரி அம்மன்வீதி,
திருநெல்வேலி, யாழ்.
(52888)(16.4)

## TRAINING OFFICER (Jaffna)

for Frontline Officers Training Project
Implemented by
the Sri Lankan Government
and Japan International Cooperation Agency (JICA)

The Project aims to enhance the community development competencies of the frontline public officers in northern, eastern and north central provinces for three years. Now it is seeking highly qualified and experienced candidate for the above position.

**Location:** Management Development Training Unit (MDTU), Kondavil Road, Jaffna

**Overview of the Position:**

To assist Provincial Project Director and MDTU officers for coordinating the training courses in the Northern Province under the supervision of JICA project experts

**Qualifications:**

- At least five years' experience and sufficient knowledge of community development in the Northern Province is required.
- Experience of organizing training/workshop regarding community development at community level in cooperation with government sectors is required.
- Experience in community development project with a foreign aid donor is required.
- Experience of working with higher authorities in government sectors is required.
- Fluent command of spoken and written English language is required, and ability of communicating in Tamil language is required.
- Sufficient skill in using Computer (Word, Excel, Power point, etc.) is required.
- Experience of working as an accountant will be an added qualification.

**Main Responsibilities/Duties:**

- To facilitate MDTU training management components in organizing training courses
- To make observation in training delivery including content, methodology, trainers' quality etc. and identify any improvements that need to upgrade the courses
- To assist planning, implementation, monitoring and evaluation of training activities of FORWARD project in Northern Province
- To assist JICA experts to manage administrative arrangements for the project activities

**Employment Period:**

From December 2014 to March 2015 (The period can be renewed for another year with one's good performance)

Salary Scale: Rs. 35,000/month ~ (negotiable according to one's ability)

**CONDITION:**

After acceptance, required to register for the temporary employment agency (Maritime Placement (Pvt) Ltd.)

Please send your CV **with the document (A4 size, only 1 page) that simply introduces your special fields according to the above required qualifications.**

Your entry must be sent by post and arrived at JICA Sri Lanka office in Colombo **by October 15, 2014.**

JEBZ

The mailing address is;
**FORWARD Project**
**(Training of Frontline Officers)**
c/o JICA Sri Lanka Office 10th Floor, DHPL Building,
No.42 Navam Mawatha, Colombo 2
(வி.16788)

## சிங்கள ஆசிரியர் யாழில் சமாதான நீதவானானார்

யாழ்ப்பாணம், ஒக். 05

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள இனத்தைச் சேர்ந்த பெண் ஆசிரியர் ஒருவர், யாழ்.மாவட்டத்தில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாவற்குழி மகா வித்தியாலத்தில் சிங்கள மொழி பாட ஆசிரியையாகக் பணியாற்றும் பள்ளிய குருகே ஆஷா தமயந்தி என்ற சிங்களப் பெண்ணே, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில், தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்களுக்கு இந்த ஆண்டு அமைச்சர் விமல் வீரவன்சவினால் காணி உறுதி வழங்கப்பட்டது. இந்த நிலையில் அங்கு குடியேறியுள்ள சிங்கள மக்களில், நாவற்குழியில் சிங்களம் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவரே தற்போது அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். (த-5)

## ஜெயாவின் விடுதலையை வலியுறுத்தி புதுச்சேரியில் கடையடைப்புப் போராட்டம்

சென்னை, ஒக்.5

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராமை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி புதுச்சேரியில் நேற்றுக் கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை,

இந்தப் போராட்டம் காரணமாக புதுச்சேரியில் நேற்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

புதுச்சேரியில் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பஸ்கள், ஓட்டோக்கள் உட்பட ஏனைய போக்குவரத்து சேவைகள் இயங்கவில்லை. சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதா விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், அவருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வேலை நிறுத்தப் போரார்ட்டத்தை நடத்துவதற்கு புதுச்சேரி மாநில அ.தி. மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நேற்றுக் கடையடைப்பு போராட்டம் நடத்துவதற்கு புதுச்சேரி அ.தி. மு.க. செயலாளர் ஏ. ரவூந்தி ரன் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இதன் பிரகாரம் நேற்றுக் காலை முதல் புதுச்சேரியில் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அ.தி.மு.க. மாநில செயலாளர் தலைமையிலான 20 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட ஜெயலலிதா ஜெயராமுக்கு பெங்களூர் சிறப்பு நீதிம்ன்றம் நான்கு வருட சிறைத் தண்டனையும், நூறு கோடி ரூபா அபராதமும் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 5671111

**தவறிவிட்டது**

34/3, இராமநாதன் றோட், திருநெல்வேலியைச் சேர்ந்த சூரியகுமாரி கந்தையா என்பவரது தேசிய அடையாள அட்டை (456811396 V) கடந்த 29.09.2014 பரமேஸ்வராச்சந்திக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொ.பே. 077 358 7976
(62904)(45.3.6)

## பாராட்டி வாழ்த்து




யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யனந்தன்-தேவி தம்பதியரின் செல்வப்புதல்வன் **கோஜனன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் கல்வியில் சிறந்து பல சித்திகளைப் பெற வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அபி மோட்டோர்ஸ்,
இல. 45, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். காந்தன் மாமா குடும்பம்.

## ஒப்பந்தகாரர் தேவை

மட்டுவில் தெற்கு, வேரக்கேணி கந்தசாமிகோயில் உள் வீதியின் மேற்கு வடக்குப் பக்க சுற்று மண்டபம் அமைக்கவிருப்பதால் கட்ட ஒப்பந்தகாரர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டு இடத்தைப் பார்வையிட்டு செலவு விவரத்தை அறியத் தரும்படி கேட்டுக் கொள்வதுடன் நீங்கள் வந்து பார்ப்பதற்கு வசதியாக October 14.2014 காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
தொ.பே: S.அஜந்தன் 077 644 1483
(52441)(12.5.6)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent

## METRO
Travles & Tours (Pvt) Ltd.

**எமது சேவைகள். . . . .**

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk
(வி16738)(12.3.6)

## யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

O/L சித்தியடையவில்லையா?
ஆங்கிலம் சித்தியடையவில்லையா?
கவலையை விடுங்கள்!

100% விசா உத்தரவாதம்

**Singapore, Malaysia, Mauritius இல் தொழிலுடன் கூடிய கல்வி வாய்ப்புக்கள்!**

- எவ்விதமான முகவர் கட்டணமும் இல்லை
- பாடநெறியின் முடிவில் PR பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
- பின்னர் உங்கள் கனவுலக நாட்டு விசாவை பெற்றுக்கொள்ளும் வழிகள்

**FREE**
Air Ticket
Accommodation
Sim card
Transport From Airport to Accommodation

உங்கள் கனவை எம் மூலம் நனவாக்குங்கள்!
உங்கள் கலாசார சூழலுடன்

**Coss Jaffna (Pvt) Ltd**
381B, Stanley Road, Jaffna.
Tel: 021 221 7552, 011 564 4440,
Mobile:076 7561 346, Fax:011 221 7552
E-mail: cossjaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சுதர்சன் சஞ்ஜை
யா/மட்டுவில் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் வித்தியாலயம்
173 புள்ளி மாவட்டம் 296 இடம்



சிறிஸ்கந்தராசா ஆர்த்தியா
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
172 புள்ளி மாவட்டம் 341 இடம்



ஜெபநேசன் டால்மின் எபிநேசன்
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
170 புள்ளி மாவட்டம் 428 இடம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
எமது வாணிப பணியாளர்களின் புதல்வர்கள்
பல பட்டங்கள் பெற்று மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும்
வரவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப்
பாராட்டி வாழ்த்துகிறேன்.

வாழ்த்துபவர்
T.குகனேசன்
உரிமையாளர் - அம்பிகை களஞ்சியம் T.P 021 2222511

அம்பிகை களஞ்சியம்
இல/306, மருத்துவமனைவீதி,
யாழ்ப்பாணம்

# விற்பனை

## மண்கும்பானில் காணி விற்பனை

மண்கும்பானில் 4 ஆம் வட்டாரப் பகுதியில் நல்ல குடிதண்ணீர் உள்ள இடத்தில் அதாவது opp. water supply முன்பாக 71 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்க்கலாம். (52835)(4.6.3)

தொடர்பு: (குமார்-0750415775)

## யாழ்.ஐந்து சந்தியில்மாடிவீடு விற்பனைக்கு

யாழ்.ஐந்து சந்திக் கண்மையில் அமைந்துள்ள புதிதாகப் புனரமைக்கப்பட்ட 4 படுக்கை அறைகள், 2 குளியலறைகள், 2 கராஜ் உள்ளடங்கிய மாடிவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 445 8582 (52838)(4.6.3)

## யாழ். சுண்டுக்குளியில்வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே.:077 614 6434 (52422) (12.3.6)

## சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்குண்டு

சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 4 அறையும், 2 ஹோல், முழுவதும் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடனும் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(52421) (12.3.6) 077 614 6434

## காணி விற்பனைக்கு

புத்தூர் வீதி, மீசாலை வடக்கில் 5½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 427 8033/011 262 3973 (F/16910)(4.6.3)

## யாழ்.கே.கே.எஸ். வீதியில் காணியுடன் கடைக் கட்டடம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், K.K.S.வீதியில் காணியுடன் கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு.

(52520) (12.3.6) தொடர்பு: 077 224 7865

## உரும்பிராயில் வீடு விற்பனைக்கு

ஒஸ்கா வீதியில், உரும்பிராயில் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

(52839) (12.3.6) தொடர்பு: 077 714 0018

## உரும்பிராயில் காணி விற்பனைக்கு

பலாலி றோட், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் 11½ பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உள்ளது.

No Brokers (52795) (7.6.3)

தொடர்பு: 076 524 9811, 076 670 3897

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு முன்பாக 200m தூரத்தில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 521 2415/021 222 9522 (52891)(4.6.3)

## வாகனம் விற்பனைக்கு

மகேந்திரா (Mahenthira) உழவு இயந்திரம் விற்பனைக்கு.
RC-XXXX - 1400 HRS பாவிக்கப்பட்டது.

தொடர்பு:
(49797 (12.3.6) 077 717 8200/077 515 1761

## கார் விற்பனைக்கு

B13 நிஷான் ஷனி (NISSAN SANAY) 64-xxxx டீசல் கார் மிகவும் நல்ல நிலையில் உள்ளது. (2ஆம் உரிமையாளர்).

தொடர்பு: S.N.T. சேவிஸ் ஸ்ரேஷன், யாழ்.வீதி, மானிப்பாய்.
(52845) (5.6.3) (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)

## வாகனம் விற்பனைக்கு

HW-xxxx தொடரிலக்கமுடைய NISSAN March கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 071 847 4971 (52844) (5.6.3)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொட்டடி, சுப்பிரமணியம் அவெனியூ(வைரவர் கோயிலடி) இலக்கம் 6 இல் உள்ள வீடு விற்பனைக்குண்டு. (நில.பர 3)

தொடர்பு: 077 227 9219 (52887)(5.6.3)

## யாழ்.கொட்டடியில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொட்டடி சிவன் பண்ணை வீதி, இல.14,வெள்ளாந் தெருவில் ஒரு பரப்பு 11 குழி காணி விற்பனைக்குள்ளது.

தொடர்பு: 0015194333654, 021 221 2115 (52828) (7.6.3)

## இயற்கைப் பூக்கள் விற்பனை

உங்களுக்குத் தேவையான இயற்கைப் பூக்களை (நுவரெலியா பூக்கள்) எங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு: 077 390 7335 (52855) (7.6.3)

# வாடகை

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதி, அரசடி ஒழுங்கையில் திருத்தியமைக்கப்பட்ட 4 அறைகள் கொண்ட பெரிய வீடு பெரிய குடும்பத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு உடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 776 0663 (F/16911)(4.6.3)

## வீடு வாடகைக்குத் தேவை

வைத்தியரின் சிறிய குடும்பத்திற்கு யாழ் நகர் பகுதியில் சகல வசதிகளுடன் (கராஜ்) கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (52883) (7.6.3)

தொடர்பு: 077 376 9284

## கடை வாடகைக்கு

இல. 144, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் (K.K.S. Road இற்கு அருகில்) பாதுகாப்பான பெரிய பிளட் கடை (கீழ்) வாடகைக்கு உண்டு. தண்ணீர் வசதி, Pipeline உண்டு.

(C/16913) (10.6.3) 011 236 3113, 077 5361 370

## வாகனம் வாடகைக்கு

709 TATA,14½' அலுமினிய Full Body வாகனம் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 316 7048 (52878) (5.6.3)

## வாடகைக்கு

அலுவலகம் / களஞ்சியத்திற்கேற்ற இருமாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்பு: 0777 150 931 (52837)(5.6.3)

## வீடு வாடகைக்குண்டு

கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 55 ஆம் (153) பலாலி வீதியில் வீடு வாடகைக் குண்டு. கல்வி நிலையம், காரியாலயம், களஞ்சியம் போன்றவற்றுக்கும் உகந்தது. வாகனத் தரிப்பு வசதி உண்டு.

தொடர்பு: 077 755 8340 (F/16912)(4.6.3)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் யாழ்.கண்டி வீதி, மாம்பழம் சந்திக்கு அருகில் 5 பரப்புக் காணியில் 2000 சதுர அடி வீடு வாடகைக்குண்டு. (52746) (12.3.6)

தொடர்பு:
077 737 4972/071 839 8072/081 238 7921

## கொக்குவிலில் வீடு வாடகைக்கு

3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தொடர்பு: 077 301 9400/ 077 662 3112 (52865)(5.6.3)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு

**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915) (10.6.3)

# கல்வி

## இசை வகுப்புக்கள்



கர்நாடக சங்கீத இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம்.

இடம் : அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தொடர்புகளுக்கு: (52882) (7.6.3)

மிருதங்க வித்துவான்
பிரணவன் கேதீஸ்வரன்
T.P : 077 867 9232

## புதிய கணக்கீட்டு வகுப்புக்கள் ஆரம்பம்

2015 A/L மாணவர்களுக்கான கணக்கீடு (Accounting) வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

(Only for English Medium Students) (52820) (7.6.3)

Contact : 077 151 0454

## போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்

— கணக்காளர் கணக்காய்வாளர் —
பரீட்சைகளுக்கு ஞாயிறு (இன்று), திங்கள், புதன் காலை 9 -4 மணி

— ரயில்வே திணைக்கள பரீட்சை —
12ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கானது ஞாயிறு 1.30 - 4.30 திங்கள், புதன் 9.00 - 4.00 மணிவரை

யாழ்ப்பாணக் கல்லூரி (52884) (10.6.3)
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கியருகில்)

# வேலை வாய்ப்பு

## உடனடி வேலைவாய்ப்பு (பெண் உதவியாளர்கள்)

18 வயது தொடக்கம் 45 வயது வரையான பெண் உதவியாளர்கள் ஆடை பொதியிடல் (Packing) வேலைக்கு தேவைப்படுவதால் விரும்புவர்கள் தங்கள் அடையாள அட்டை, கிராம சேவகரின் அத்தாட்சி பத்திரம் ஆகியவற்றுடன் பின்வரும் விலாசத்திற்கு நேரடியாக வருகை தாவும். 25000 ரூபாவிற்கு மேற்பட்ட சம்பளம், மேலதிக வேலை ஊதியம் குறைந்த விலையில் உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்

விலாசம் - க்ளிப்டெக்ஸ் / இல. 18/ வெலியமுன வீதி / ஹெகித்த / வத்தளை.
தொடர்புகளுக்கு அழைக்கவும்.
011-2930223 / 075-6838758 - தர்சனா

## வேலைவாய்ப்பு

**MEDICAL LABORATORY TECHNOLOGIST**

வைத்தியபரிசோதனை ஆய்வு கூட ஆய்வுப் பரிசோதகருக்கான விண்ணப்பம் கோரல்.

தகைமைகள்:

★ SLMC அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு இலக்கத்தைக் கொண்டிருத்தல்
★ 2 வருட அனுபவம் (கட்டாயம்)
★ வயதெல்லை இல்லை.

மேற்கூறிய தகைமைகளில் தெரிவு செய்யப்படுவோருக்கு கவர்ச்சிகரமான சம்பளமும் ஏனைய சலுகைகளும் செய்யப்படும். மேற்கூறிய தகைமை உள்ளவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (52887)(4.6.3)

T.P: 077 324 7204/075 990 0582

## பதவி வெற்றிடம்

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் சந்தைப் படுத்தல் துறைக்கு(Marketing) பெண் உத்தியோகத்தர்கள் தேவை. வயது 18-30

(52800) தொடர்பு: 077 727 7281

## ரெயிலர் தேவை

சேட், ரவுசர் தைக்கத் தெரிந்த ரெயிலர் தேவை.

(52890) (10.6.3) தொடர்பு: 0779 384 809

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும். பழக விரும்புபவர்களும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 8544

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல இலத்திரனியல் மின்சாரப் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

1) கணக்குப் பதிவாளர் (அனுபவம் உள்ளவர்)
2) சிட்டை எழுதுநர் (தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசக் கூடியவர்)

மேற்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்கள் 08.10.2014 புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு சுய விவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

**JAFFNA ELECTRICALS**
No. 94(6) Stanly Road, Jaffna.
T.P - 021 222 2353 (சி/16731) (7.6.3)

## Nick Advertising International

எமது கிளைகளுக்கு மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள், உதவி முகாமையாளர்கள், முகாமையாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு இணைக்கப்படுவர். தகைமையாக O/L, A/L போதுமானதாகக் கருதப்படுகின்றது. (52851) (7.6.3)

மேலதிக தகவலுக்கு :
இல. 175, முதலாம் குறுக்குத் தெரு, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 354 8006, 075 987 5612

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **Virus Printers** அச்சகத்திற்கு **KORA machine minder** தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்

T.P. 077 657 0315
(52819) (45.3.6) 077 592 5096

## விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையின் முதற்தர உப்பினை யாழ். மாவட்டத்திலும் வன்னி மாவட்டத்திலும் விநியோகம் செய்வதற்கு விற்பனையில் முன் அனுபவம் உடைய விற்பனைப் பிரதிநிதி தேவை. தொடர்பு: (C/16761) (10.6.3)

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மணமக்கள்

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1985,பூரா நட்சத்திரம், 10 இல் சூரியன், செவ்வாய், புதன், சந்திரன், பாவம் 27½, கொழும்பில் ஆசிரியராகப் பணிபுரியும் மணமகளுக்குப் பொருத்தமான பட்டதாரி மணமகன் தேவை. வலிகாமம்/தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. (52861)(5.6.3)

தொடர்பு: 077 233 6220/077 739 7592

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1988ஆம் ஆண்டு கார்த்திகை 4ஆம் பாதம் நட்சத்திரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த வரனை (மணமகன்) பெற்றோர் தேடுகின்றனர்.

(C/16909) (10.6.3) தொடர்பு: 077 601 8238

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூரட்டாதி முதலாம் பாதம், கிரகபாவம் 43¼, 8இல் செவ்,குருவினைக் கொண்ட, முதுகலை மாணிப் பட்டம் முடித்து 5' 4" உயரம் கொண்ட, 38வயதுடைய ஆசிரியருக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளை 7, 8 வயது வித்தியாசத்தில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(52441) (12.3.6) தொடர்பு: 021 222 0174

# வைத்தியம்

## மாற்று வைத்தியம் ஞாயிறு, திங்கள், செவ்வாய்

நாற்பட்ட தலைவலி, வாதம், முள்ளந்தண்டு விலகல், வலி, வேதனை, குத்து, உளைவு, ஆஸ்துமா, இழுப்பு, உடல் எடை குறைத்தல், கூட்டுதல், குழந்தை வேண்டுபவர்களின் அனைத் துத் தேவைகள்.

சித்த வைத்தியர்
Dr. R. Sivagurunathan
0777 301 669
நல்லூரில் சந்திப்பு இலவசம் (C/16914) (10.6.3)

# தேவை

## வீடு தேவை

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

தொடர்பு: (52901) (5.6)
077 052 7573/ 077 371 0447/077 664 1950

## தேவை

யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.

தொடர்பு :
0757 257 812 / 0212 241 605

## தேவை

கொழும்பு பம்பலபிட்டியில் இரண்டு பேர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் 15000/-

தொடர்பு : 0771 586 709

# சேவை

## இணையத்தள வடிவமைப்பு

பாடசாலைகள், கிராமங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான இணையத் தளங்களை சிறந்த முறையிலும் குறைந்த செலவிலும் வடிவமைத்துக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

T.P: 077 339 4457 (52885)(4.6.3)

## தையல்

இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.

இல. 39, நாவலர் வீதி. (யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில்)

தொடர்பு: 0766 399 277 (52857)(5.6.3)




# தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கலில் நொரிடேக் நிறுவனத்துக்கு வெள்ளி விருது

நொரிடேக் லங்கா போர்சிலைன் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனமானது அண்மையில் இடம்பெற்ற 'தேசிய உற்பத்தித்திறன் விருது' வழங்கல் நிகழ்வில் 'பெரிய உற்பத்தியாக்கல்' பிரிவின் கீழ் வெள்ளி விருதைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இப்பிரிவில் தங்க விருது வழங்கப்படவில்லை என்பதால், இவ்விருதுப் பிரிவிலே ஒட்டுமொத்த வெற்றியாளராகவும் உயர் மதிப்பெண்களைப் பெற்ற நிறுவனமாகவும் நொரிடேக் லங்கா போர்சிலைன் பிரைவேட் லிமிட்டெட் திகழ்கின்றது.

'குறிப்பிட்ட விருதுப் பிரிவில் மிகவுயர்ந்த வெற்றியாளராக எம்மை மிளிரச் செய்யும் விதத்தில் இவ்விருது கிடைத்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.



இது எமக்கு ஊக்கமளிப்பது மட்டுமன்றி மேலும் உயர்ந்த நிலைகளை அடைவதற்கு எமக்கு ஊக்கமளிப்பதாகவும் எமது பயணத்தை இன்னும் சிறப்பாக மேற்கொள்ள வழிவகுப்பதாகவும் அமைகின்றது' என்று நொரிடேக் லங்கா போர்சிலைன் பிரைவேட் லிமிட்டெட் (NLPL) நிறுவனத்தின் பிரதித் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான யொசினரி சிமாயா தெரிவித்தார்.

உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சின் கீழியங்கும் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் நிகழ்வு, மிகவும் பரந்துபட்ட விடயங்களை மதிப்பீடு செய்யும் முறைமையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இந்த நாட்டிலுள்ள உற்பத்தித் திறன்மிக்க நிறுவனங்களின் விளைவாக உற்பத்தித் திறன்மிக்க தேசம் ஒன்று உருவாகும் என்று நம்பலாம்.

அனைத்து மட்டங்களிலும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இதன் முதன்மையான நோக்கமாகக் காணப்படுகின்றது.

சிலோன் செரமிக் கூட்டுத்தாபனம் மற்றும் நூறு வருடங்கள் பழைமைவாய்ந்த ஜப்பானின் நொரிடேக் கொம்பனி லிமிட்டெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சிக் கம்பனியாக 1972ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட NLPL ஆனது, இன்று இலங்கையின் முன்னோடி மேசைப் பீங்கான் (போர்சலைன்) பாத்திரங்கள் உற்பத்திக் கம்பனியாக முக்கியத்துவமிக்க அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றது.

1972ஆம் ஆண்டில் 150 பேரைக் கொண்ட ஆளணியுடன் தனது தொழிற்பாட்டை ஆரம்பித்த இந்த தொழிற்சாலை கடந்த பல வருடங்களில் 1200 திறனுள்ள தொழிலாளர்களைக் கொண்டதாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் அதிகமான தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு தத்தமது தொடர்புடைய துறைகள் தொடர்பில் ஜப்பானில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய நிபுணத்துவத்திற்கு மேலதிகமாக, இதனது முகாமைத்துவ நடைமுறைகளுக்கு இலங்கை தர நிறுவகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ISO 9001:2008 தரச் சான்றுபடுத்தல் ஆதரவளிக்கின்ற அதேவேளை, சர்வதேச நன்நெறிமுறைகளுக்கு இணங்கியும் தொழிற்படுகின்றது.

மாத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலையானது உலகளவில் காணப்படும் மிகப் பெரிய உற்பத்தியாக்கல் வசதிகளுள்ள ஒன்றாக திகழ்வதுடன், நொரிடேக் (Noritake) வர்த்தக குறியீட்டின் கீழ் உயர்தர மிக்க மேசைப் பாத்திரங்களை உற்பத்தி செய்தும் வருகின்றது. (த)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த செயற்படும் ரபெல்ஸ் இன்ஸ்ரிரியூட்

Raffle's Institute of Catering and Hotel Management

கடந்தமாத ஆரம்பத்தில் இலங்கையின் மில்லியன் சுற்றுலாப் பயணியை வரவேற்றிருந்த நிலையில், இலங்கையின் மிகப்பெரிய, வேகமாக வளர்ந்து வரும் மற்றும் அதிகளவு தொழில் வாய்ப்புகளை கொண்டுள்ள துறையாக விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை என்பது அமைந்துள்ளது. இலங்கையில் மட்டுமில்லாமல், உலகளாவிய ரீதியிலும் இந்தத் துறையில் பெருமளவானவர்கள் தொழில் வாய்ப்பை பெற்று வருகின்றனர்.

2011 ஆம் ஆண்டில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த ரபெல்ஸ் இன்ஸ்ரிரியூட்டை துறையில் புகழ்பெற்ற பிரமுகரான ரபெல்ஸ் கொன்சொலிடேடட் இன் தலைவர் டோனி பொஹொரன் தாபித்திருந்தார்.

இன்று இந்தக் கல்வியகம் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறையில் வெவ்வேறு வகையான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகிறது. அண்மையில் இந்த கல்வியகத்தின் மூலம், ஓமான் பாதுகாப்பு சேவைகளைச் சேர்ந்தவர்களுக்கும் உணவு மற்றும் பானசேவைகளில் குறுங்கால அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

நிபுணத்துவம் வாய்ந்த உணவு தயாரிப்பு மற்றும் உணவு மற்றும் பான வகை முகாமைத்துவ செயற்பாடுகளில் பட்டத்தை வழங்கும் வகையில் மற்றும் சிலோன் ஹோட்டல் பாடசாலையின் அங்கீகாரம் பெற்றுள்ளதுடன், மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் கல்வி நிலையத்துடன் இணைந்த நிலையமாக அமைந்துள்ளது. பொதுவான பாடங்களுக்காக மாணவர்களை உட்சேர்ப்பதற்கு மேலாக விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான கல்விக்கு இலங்கையில் அதிகளவு கேள்வி காணப்படுகிறது. இது எமக்கு வியப்பூட்டுவதாக அமைந்திருப்பதில்லை.

'இந்தத் தொழிற்துறை பல்வேறு விசேட தெரிவுகளைக் கொண்டுள்ளது. ஹோட்டல் முகாமைத்துவம் முதல் உணவு தயாரிப்பு, விநியோகம் மற்றும் சமையல் கலை போன்றவை இதில் உள்ளடங்கியுள்ளன. இந்த நிலைகள் வெவ்வேறு சூழலில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் றிசோர்ட்கள், உணவகங்கள், கப்பல்கள் மற்றும் விமானங்களில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வழங்கும் வகையில் அமைந்துள்ளன'.

உலக பிரயாண மற்றும் சுற்றுலா சம்மேளனத்தின் தரவுகளுக்கு அமைய, விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை என்பது உலகளாவிய ரீதியில் காணப்படும் 260 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களை தொழிலில் கொண்டுள்ளது. அத்துடன், இந்தத் துறையில் உள்நாட்டில் அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன. முன்பிருந்ததை போலில்லாமல், தற்போது விருந்தோம்பல் துறையில் நிலைத்திருப்பதற்கு தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## படைத்துறையின் நிழல் ஆட்சி மிக மிக ஆபத்தானது

"பேச்சக் குறடா" என்கிற சொல் வழக்கு ஒன்று தமிழக மக்களிடம் அதிகம் புழக்கத்தில் உண்டு. தேவையற்ற விதத்தில் பேசியே சிக்கல்களில் மாட்டிக்கொள்பவர்களைப் பார்த்து நக்கலாக இந்தச் சொல் வழக்கை அவர்கள் பயன்படுத்திக் கொள்வர். தமிழ் சினிமாக்களிலும் அவ்வப்போது இதனைக் காணமுடியும்.

கொழும்பு அரசின் தலைவர்களுக்கும் இது சாலப் பொருத்தமான சொல் வழக்காக இருக்கும் என்று படுகிறது. அவர்கள் சொல்வது எதனையும் செய்வதில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை. மக்களை மாக்களாக நினைத்துக்கொண்டு அவ்வப்போது வாய்க்கு வீந்தபடியெல்லாம் எதையாவது கூறிவிட்டுப் போய் விடுகிறார்கள் போலுள்ளது.

கொழும்பு அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமெரிக்காவுடனான உறவு குறித்துத் தெரிவித்த கருத்தும் இப்படிப்பட்ட ஒன்றுதான் என்று தெரிந்துவிட்டது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த மஹிந்த, அங்கு அந்த நாட்டு வெளி விவகாரச் செயலாளர் ஜோன் கெரியைச் சந்தித்துப் பேசியிருந்தார். அப்போது அமெரிக்காவின் இறுக்கமான போக்குத் தளர்ந்திருப்பதாகத் தான் உணர்ந்தார் என்று கொழும்பில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

இந்தச் செய்தி வெளியான உடனேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் அதனை மறுத்தார். அமெரிக்கக் கொள்கையில் மாற்றம் ஏதுமில்லை என்று உறுதிப்படுத்தினார். இலங்கையுடனான உறவு முழுமையடைய வேண்டும் என்றால், இங்குள்ள பல் தரப்பட்ட இன, மத குழுக்களுக்கு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் பேச்சாளர் வலியுறுத்தியிருந்தார்.

அதைவிட முக்கியமாக, போரில் ஈடுபட்டிருக்காத நாடு என்பதைக் காண்பிக்கும் விதத்திலான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் என்கிற அமெரிக்காவின் நிலைப்பாடு ஜோன் கெரியால் கொழும்பு அரச தலைவருக்கு விளக்கப்பட்டது என்கிற விடயமும் கூடவே வெளி வந்தது.

ஒரு புறத்தில் சீனாவுடன் ஒப்பந்தங்களைச் செய்து நெருங்கி உறவாடிக் கொண்டே மறுபுறத்தில் அமெரிக்காவையும் தான் சமாளித்து நெருக்கமான உறவைப் பேணுவதாகத் தனது சகாக்களை நம்ப வைக்கும் நோக்குடன் மஹிந்த இந்தக் கருத்தை ஒருவேளை வெளியிட்டிருக்கலாம். ஆனால் அது வில்லங்கத்தில் வந்து முடிந்திருக்கிறது. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று அமெரிக்கா அடித்துச் சொல்லிவிட்டது.

எனவே இப்போதைக்கு "சர்வதேச வெளி"யில் இலங்கை தொடர்பான போக்கு மாற்றமடைவதற்கான வாய்ப்பு ஏதுமில்லை. அதுவும் எதிர் வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் மாற்றங்களுக்கான வாய்ப்பு இல்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுவிட்டது.

வாயை மூடிக்கொண்டிருந்திருந்தால் பிரச்சினை இவ்வளவு தெளிவாக - வெட்டு ஒன்று துண்டு இரண்டாக - வெளித் தெரிந்திருக்காமலே போயிருக்கக்கூடும். இப்போதோ நிலைமை மேலும் மோசமாகி விட்டிருக்கிறது.

இதில் மட்டுமன்றில்லை, தமிழர்கள் தொடர்பான விடயங்களிலும்கூட பேச்சைக் குறைத்துக் கொண்டு செயலில் காட்டுவதை கொழும்புத் தலைவர்கள் பழகிக்கொள்வது நல்லது.

# ஸ்கொட்லாந்தில் ஜனநாயகம் மலர்ந்து நறுமணம் வீசுகிறது

கந்தவனம் கோணேஸ்வரன்

## ஊவாவிலோ சாக்கடை வாடை

கடந்தவாரம் இலங்கை மக்களின் கவனத்தை ஈர்த்த இரண்டு வாக்கெடுப்புகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. ஒன்று செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று ஸ்கொட்லாந்து நாட்டில் இடம்பெற்ற கருத்தறியும் வாக்கெடுப்பு, மற்றையது இலங்கை ஊவா மாகாணத்தில் செப்டெம்பர் 20 ஆம் திகதியன்று இடம்பெற்ற மாகாணசபையின் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பு. ஒன்று ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து முறைப்படி இடம்பெற்றது. மற்றையது, ஜனநாயக முறைப்படி நடைபெற்றதாக அரசால் விளம்பரப்படுத்தப்பட்டது.

ஊவா மாகாணசபைத்தேர்தல் இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற மிகமோசமான நடைமுறை மீறல்கள் கொண்ட மாகாணசபைத் தேர்தல் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. உயிரிழப்பு, இரத்தக்காயங்கள், ஏராளமான உடைமைகள் இழப்பு என்பவை இத்தேர்தலில் தாராளமாக இடம்பெற்றிருக்கின்றன. அரச வளங்கள் துஷ்பிரயோகத்துக்குள்ளானமை, அதிகளவிலான ஆயுதங்களின் பயன்பாடு, அதிகரித்த வெளியார் தலையீடுகள், தேங்காய்முதல் பணம்வரையிலான இலஞ்சம், இறுதிநேரத்தில் விகாரைகள், கோயில்களுக்குப் பிற்திகதியிடப்பட்ட காசோலை அன்பளிப்புகள் போன்ற முறைகேடுகள் உச்ச அளவில் இடம்பெற்றிருந்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் கூறியிருக்கிறார்.

அதிகளவிலான சட்டமீறல்கள், மிகமோசமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிருக்கும்போது அவற்றைவிடுத்து மொனராகலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர், பாதிக்கப்படாதோர் அனைவருக்கும் வலிந்த அரச நிவாரண வழங்கல், தேர்தல் முடிவுகள் வெளியான பிறகும் அரச தரப்பினரின் வன்முறைச் செயற்பாடுகள் என்பவை தாராளமாக இடம்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டி ஆராச்சி உறுதிப்படுத்தியுள்ளார்.

இரு தரப்பினரும், பொலிஸார் சரியாகச் செயற்படவில்லை என்றும் குற்றஞ் சுமத்தியிருக்கிறார்கள். ஆனால், தேர்தல் திணைக்களமோ பெரிய அசம்பாவிதங்கள் எவையுமின்றித் தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்திருப்பதாக அறிவித்திருக்கிறது. அரசும் ஒரு ஜனநாயகத்தேர்தலை நடத்தி முடித்திருப்பதாகப் பெருமையடித்துக் கொள்கிறது.

அரச தரப்பினரது உச்ச அடாவடித்தனங்கள் இடம்பெற்றிருந்த போதிலும் ஊவா மாகாணசபைத் தேர்தலில் அரச தரப்பால் எதிர்பார்த்த வெற்றியைப் பெறமுடியாமற் போய்விட்டது. அரச செல்வாக்கின் வீழ்ச்சி அப்பட்டமாகத் தெரியும் விதத்திலேயே தேர்தல்முடிவுகள் அமைந்திருக்கின்றன. 2009 இல் இடம்பெற்ற தேர்தலில் ஈட்டிக்கொண்ட வாக்குகளைவிட இம்முறை அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை இழந்ததோடு ஆறு உறுப்பினர்களையும் அரச தரப்பு பறிகொடுத்திருக்கிறது. இனிமேல் தலையெடுக்க முடியாது என்று அரசால் கணக்குப் போடப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தனது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொண்டதோடு கடந்த தேர்தலில் பெற்றிருந்த ஏழு ஆசனங்களைப் பதின்மூன்றாகவும் உயர்த்திக்கொண்டுள்ளது. ஜே.வி.பியும் தனது ஓர் ஆசனத்தை இரண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி தனித்துநின்று அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய பெருமை ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும். யுத்தவெற்றியைக் காட்டித் தொடர்ந்தும் வாக்குகள் கேட்கமுடியாது என்ற செய்தி அரசுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அபிவிருத்திகள் என்பவை இன்றைய உலகில் அரசின் சாதனைகளாகக் கொள்ளப்படத்தக்கவையல்ல: அவை உலக மாறுதல்களின் அடையாளங்கள்: எந்த அரசு ஆட்சியிலிருந்தாலும் முன்னெடுக்கப்பட்டே தீருமென்பதால் மஹிந்த அரசு அபிவிருத்தியை வாக்குச் சேகரிக்கும் உத்தியாக இனிமேலும் பயன்படுத்தமுடியாது என்ற செய்தியும் அரசுக்குத் தெள்ளத்தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கிறது.

இவற்றின்படி மஹிந்த அரசு புதிய பாதையைத் தேர்ந்தெடுத்தாலொழிய அடுத்துவரும் தேர்தல்களில் களமிறங்க முடியாத நிலைமை ஏற்படலாம். அப்படிக் களமிறங்கி முழுப் பலத்தையும் பயன்படுத்தினாலும்கூட விளிம்புநிலை வெற்றியையே தக்கவைத்துக்கொள்ள முடியும். எனவே, மஹிந்த அரசு தொடர்ந்தும் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் யுத்த வெற்றியையும் இனவாதத்தையும், அபிவிருத்திகளையும் காட்டிக்கொண்டிருக்க முடியாது என்ற நிலை தோன்றியிருக்கிறது.

முஸ்லிம் தலைமைகளுக்கும் முஸ்லிம் வாக்காளர்கள் நல்லதொரு பாடம் கற்பித்திருக்கிறார்கள். அரசுடன் சேர்ந்து சலுகைகளை அனுபவிப்பது, தேர்தல் சமயங்களில் இலட்சியத்தை விட்டுக்கொடாத பேர்வழிகள்போல் தனித்துத் தேர்தலில் களமிறங்கி நாடகம்போடுவது, வெற்றிபெற்றதன் பின்னர் அவ்வெற்றியை ஏந்திச்சென்று அரசின் காலடியில் சமர்ப்பித்துக் கைகட்டிநின்று தருவதை வாங்கிப் பிழைத்துக் கொள்வது என்ற முஸ்லிம் தலைமைகளின் போக்கை மக்கள் அடியோடு நிராகரித்திருக்கிறார்கள். முஸ்லிம் தலைமைகளும் அரசியலில் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் வேறுபாடான கோணத்தில் சிந்திக்கவேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது.

தேர்தலில் கிடைத்த வெற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. தோல்வியின் நாயகன் எனப் பெயரெடுத்த ரணில் விக்ரமசிங்க இனிமேல் வெற்றியின் நாயகனாகலாம் என்று நம்பிக்கை கொள்ள வைத்திருக்கிறது. இந்தப் பெருமிதத்துடன் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக உயர்த்தப்பட்டிருக்கிறார். அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படத்தக்கவர் ரணிலே என சஜித் பிரேமதாஸாவே தகவுரை செய்யுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

எவ்வாறெனினும், தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வித்தியாசமான அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்காலத்தில் வகுக்கப்படவிருக்கும் தேர்தல் உத்திகள் வழமையான உத்திகளாக அமையமாட்டா என நம்பலாம். யுத்தவெற்றி மாயையையும், அபிவிருத்திகளையும் கடந்து சிங்கள மக்களுக்கு நல்லாட்சி முறைமையொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை அரசியல்வாதிகளுக்கு எழுந்திருக்கிறது. தமிழர்களைக் காட்டித் தேர்தல் உத்திகளை வகுத்தாலும், அவை எதிர்காலத்தில் எடுபடாமல் போய் விடலாம் என்ற அச்சமும் துளிர்த்திருக்கிறது.

என்றாலும், தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் உடனடியாக மாறுதல்கள் எவையும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. இனவாதம் என்ற பாதையிலே நெடுநாள்களாகப் பயணித்தவர்கள், புதிய பாதையொன்றுக்குத் தங்களைத் தயார்படுத்துதற்கு காலங்கள் குறிப்பிட்ட காலம் தேவைப்படலாம். ஏனெனில், பாதை தெளிவாகத் தெரிந்தாலும் அதில் பயணம் செய்யும் திறமையைக் கற்றுக்கொள்ளவேண்டிய தேவை சிங்கள அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது.

ஊவா மாகாணசபைத் தேர்தல் மாத்திரமன்றி ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பும் இலங்கை அரசுக்கு ஒரு செய்தியைத் தந்திருக்கிறது. ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து போவதா, வேண்டாமா என்பது பற்றி ஸ்கொட்லாந்து வாழ் மக்களிடையே இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்து தனியே பிரிந்துபோகத் தேவையில்லை, இப்போதிருப்பதுபோலவே ஐக்கிய இராச்சியத்தின் ஓர் அங்கமாகவே இருக்கட்டும் என்ற முடிவை 55.3 வீத மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஸ்கொட்லாந்து தனியே பிரிந்து செல்லக்கூடாது என்பதற்கான நியாயங்களை வலியுறுத்திப் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தீவிர பரப்புரையை முன்னெடுத்திருந்தார். இப்போது ஸ்கொட்லாந்து நாட்டு மக்கள் அனுபவித்துவரும் அதிகாரங்களைவிடக் கூடிய அதிகாரங்களைத் தரத் தயாராக இருக்கிறோம்: பிரிந்து போகவேண்டாம் என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஸ்கொட்லாந்து நாட்டின் முதல்வரும், ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் தலைவருமான அலெக்ஸ் சால்மன் தனது நாடு பிரிட்டிஷ் இராச்சியத்திலிருந்து விடுபட்டுத் தனிநாடாக வேண்டும் என்ற பரப்புரையைச் செய்தார். தனி நாடாவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளை மக்கள் மனதில் பதியும் வண்ணம் எடுத்துரைத்தார். இருபது வருடங்களுக்கும் மேலாக ஸ்கொட்லாந்து நாட்டு மக்களின் மனதில் இடம்பெற்றிருக்கும் தலைவர் இவர்.

இரு தலைவர்களும் கருத்துப்போரில் ஈடுபட்டார்கள். காழ்ப்புணர்ச்சி கொள்ளவில்லை. பவ்வியமானதும் முறையானதுமான பரப்புரைகள் மூலம் தங்கள் கருத்துகளுக்கு மக்களிடம் ஆதரவு தேடினார்கள். தத்தம் பக்கத்து நியாயங்களை எடுத்துச் சொன்னார்கள். பரப்புரை நடவடிக்கைகளுக்கு ஆதரவாகக் குண்டர்கள் எவரும் ஈடுபடுத்தப்படவில்லை. வாகனங்கள் எவையும் அடித்து நொறுக்கப்படவில்லை. துவேசமான இனஞ்சார் வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற வில்லை.

ஸ்கொட்லாந்து மக்கள் தாம் தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கு முடிவெடுத்திருந்தாலும்சரி அல்லது இணைந்திருக்க வேண்டும் என்று எடுக்கப்பட்ட முடிவானாலும்சரி இவ்வாக்கெடுப்பின் மூலம் நாட்டு மக்களும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் ஒரேநேரத்தில் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதே உண்மை. இது ஓர் அதிசயமான முடிவு.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 187

# பிள்ளைகளை அன்புடன் பாதுகாப்போம்

இது தான் இவ்வருட உலக சிறுவர் தினத்துக்கான தொனிப் பொருள். உலக சிறுவர் தினம் இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. எல்லோரும் சிறுவர்களின் உரிமைகளுக்காகவும் அவர்களது பாதுகாப்புக்காகவும் குரல் கொடுத்து வருகிறார்கள். சிறுவர்களின் பாதுகாப்பு எனக் கூறும் போது, அனைவராலும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றியும் சிறுவர் தொழிலாளிகள் பற்றியும் அவற்றைத் தடுக்க வேண்டிய வழிகள் பற்றியும் பேசப்படுகிறது. அவற்றுக்கு மேலாக, எமது வீட்டிலேயே, எம் சூழலிலேயே எம் குழந்தைகளையும் சிறார்களையும் சிறு சிறு விடயங்களில் பாதுகாக்க தவறிவிடுகின்றோம். அந்தச் சின்னச் சின்ன தவறுகள் சில சமயங்களில் அவர்களைப் பெரியளவிலும் பாதிக்கக் கூடும்.


ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் உருவாகும் போதே அதை பாதுகாப்பாக வளர்க்க பல வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிலும் மிகமுக்கியமானது, தாயினுடைய போசாக்கு. பெண்களின் போசாக்கு. அவள் கர்ப்பமாவதற்கு முன்னரே அவளது போசாக்கு நிலை திருப்திகரமானதாக இருந்தால் தான், அவளால் ஒரு சுகதேகியான குழந்தையைப் பெற்றெடுக்க முடியும். அதே போல் குழந்தை உருவாகும் முன்னரே போலிக் அசிட் எனப்படும் விற்றமின்களை கர்ப்பமடைய முன்னரிலிருந்து கர்ப்பகாலம் முழுவதும் உட்கொள்ள வேண்டும். அதனை எமது சமூகத்தில் எத்தனைபேர் சரிவர கடைப்பிடிக்கிறார்கள். கருவில் வளரும் குழந்தையை பாதுகாக்க ஒழுங்காக சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பெற்று சுகமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும். ஆனால் இவற்றை பின்பற்றாமல் எமது சமூகத்தில் சிலர் கவனயீனமாக குழந்தையை வீட்டிலோ அல்லது தெருவிலோ பெற்று அதனை வீசும் நிகழ்வுகளும் நிகழ்கின்றன.

ஒரு குழந்தை பிறந்தபின் அக் குழந்தையை நோய் நொடிகளின்றி வளர்ப்பதற்கு எல்லோருக்கும் விருப்பம் தான். ஆனால் எம்மில் எவ்வளவு பேர் தகுந்த சுகாதார முறைகளைப் பின்பற்றுகிறார்கள்? புதிதாய்ப் பிறந்த குழந்தைக்கு நோய்கள் தொற்றாமல் இருக்க சுகாதார முறைப்படி பராமரிக்க வேண்டும். குறிப்பாக குழந்தை பராமரிப்பின் போது கைகழுவுதல் போன்ற நல்ல பழக்கங்களை எத்தனைபேர் பின்பற்றுகிறார்கள்? அதுமட்டுமல்லாமல் அளவுக்கதிகமானோர் பச்சிளம் பாலகர்களை தூக்கும் போதும் அரவணைக்கும் போதும் நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

குழந்தைகளின் போசாக்கில் மிக முக்கியமானது தாய்ப்பாலூட்டலாகும். தாய்ப் பாலூட்டலின் முக் கியத்துவம் பற்றி பலரும் அறிந்திருந்தும் தமது குழந்தைகளுக்கு தொடர்ந்து வழங்குவதற்கு தவறிவிடுகிறார்கள். பிறந்தது முதல் ஆறு மாதங்களுக்கு தனித் தாய்ப்பாலே குழந்தையின் ஆகாரம் என பரிந்துரை செய்யப்படுகிறது. தனித்தாய்ப் பாலூட்டலை ஊக்குவிக்க பல்வேறு ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. எனினும் சிலர் குழந்தைக்கு தாய்ப்பாலைத் தவிர சுடுநீர், சீரகத் தண்ணீர், கற்கண்டுத் தண்ணீர் என பலதையும் பருக்கி குழந்தைக்கு ஆபத்துக்களை உண்டாக்குகின்றனர்.

ஒரு குழந்தைக்கு ஆறு மாதங்களின் பின்னர், முறையாக மேலதிக (மிகைநிரப்பு) ஆகாரங்களை வழங்க வேண்டும். அதற்காக எமது சூழலில் கிடைக்கும் இயற்கையான உணவுகளை எமது கலாசார பழக்க வழக்கங்களின் படி வழ்க்குவதற்கான தகுந்த முறைகளை சுகாதாரத் துறையினர் அறிவுறுத்துகின்றார்கள். ஆனால் பலர் அதனைப் பின்பற்றுவதில்லை. மாறாக, வர்த்தக ரீதியில் தயாரிக்கப்பட்ட உணவுகளை குழந்தைக்கு கொடுக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் நாம் எமது குழந்தைகளைச் சரியாக பாதுகாக்கின்றோமா எனச் சிந்திக்க வேண்டும்.





எமது குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாக்க நல்ல சுகாதாரப் பழக்கங்களை பின்பற்றுதலும், உரிய வேளைகளில் நோய்த் தடுப்பு ஊசிகளைப் வழங்குவதும் முக்கியமானதாகும். எமது நாட்டில் அனேகமான குழந்தைகள் சரியாக நோய்த் தடுப்பு ஊசிகளைப் பெற்றாலும் ஒரு சில பெற்றோர் முறைப்படி நோய்த் தடுப்பு ஊசி வழங்க தவறிவிடுகின்றனர். அதேபோல் பொதுவான தொற்று நோய்களான வயிற்றோட்டம், சளிக்காய்ச்சல் என்பவற்றிலிருந்து எமது குழந்தைகளைக் காப்பாற்ற முறைப்படி கைகழுவுதல், சுத்தமான கொதித்தாறிய நீரருந்துதல், சுகாதாரமான உணவுகளை வழங்குதல் போன்ற சுகாதார முறைகளை பின்பற்றத் தவறுகிறார்கள்.

எமது குழந்தைகளையும் சிறுவர்களையும் பிற்காலத்தில் ஏற்படக் கூடிய நீரிழிவு, குருதியமுத்தம், அதிக எடை போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்க ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களையும் தேகப் பயிற்சிகளையும் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். ஆனால் பெரும்பாலான சிறுவர்கள், வர்த்தக ரீதியான உடன் தயாரிப்பு உணவுகளையும் நொறுக்குத் தீன் பண்டங்களையும் உட்கொள்வதுடன் உடலுறுதியை வழங்கக் கூடிய விளையாட்டுகளில் நாட்டமின்றி காணொலி விளையாட்டிலும் கணினி முன்னாலும் தொலைக் காட்சி முன்னாலும் நேரத்தைச் செலவழிக்கின்றனர். எனவே பெற்றோராகிய எமக்கு எமது இளம் பிள்ளைகளை இவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய கடமை உண்டல்லவா?

இவ்வாறே சிறுவர்களையும் குழந்தைகளையும் விபத்துகளிலிருந்து பாதுகாத்தல் பெரியவர்களுடைய கடமையாகும். குழந்தைகள் எதிர்கொள்ளும் பெரும்பாலான விபத்துக்கள் பெரியவர்களின் அலட்சியத்தினால் வீட்டினுள்ளேயே ஏற்படுகின்றன. உதாரணமாக மண்ணெண்ணெய் போன்ற நச்சுப் பதார்த்தங்களை அருந்துதல், நீரில் மூழ்குதல், தீக்காயங்கள் போன்றனவாகும். பெற்றோர் தகுந்த முன் அவதானங்களை கையாளுவதன் மூலம் இவ்வாறான விபத்துக்களைத் தடுத்து சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

குழந்தைகளதும் சிறுவர்களதும் உடல் உள வளர்ச்சிக்கு முக்கியமானவற்றில் ஒன்றுதான் பெரியோர் செலுத்தும் அன்பும் பாசமும். இன்றைய அவசர உலகில், அனேகமான பெற்றோர் தமது குழந்தைகளுடனும் சிறுவர்களுடனும் அன்போடும் பாசத்தோடும் கதைத்துப் பேசி அவர்கள் மனநிலைக்கேற்ப அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய நேரமில்லாதுள்ளது. மேலும் சிறுவர்களுக்கும் மேலதிக வகுப்புக்கள் போன்றவற்றாலும் தமது பெற்றோருடன் குடும்பமாக மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்க முடியாதுள்ளது. இதன் விளைவாக பல சிறுவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

இறுதியாக பலராலும் இன்று பேசப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களும், சிறுவர் உரிமை மீறல்களும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு மிக அச்சுறுத்தலாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சிறுவர் வாழும் வீட்டினுள்ளேயே அல்லது அயலில் தான் நடக்கின்றன. பெற்றோர், பாதுகாவலர் சரியான அவதானத்துடன் பிள்ளைகளை வளர்க்கும் போது சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் குறைவடையும். சில சந்தர்ப்பங்களில் வேலியே பயிரை மேய்வதுபோல் சிறுவர்களின் பாதுகாவலர்களாலேயே இவை நடந்து விடுகின்றன. இவை பற்றிய செய்திகளை நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம்.

அவற்றைத் தடுக்க கடுமையான சட்டதிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. எனினும் அன்பும் கருணையும், குழந்தை வளர்ப்பு, சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை பற்றிய அறிவும் எல்லாப் பெற்றோருக்கும் வளர்ந்தோருக்கும் உண்மையில் உருவாகினால் வருங்காலச் சந்ததியினரான குழந்தைகளும் சிறுவர்களும் நிச்சயமாகப் பாதுகாக்கப்படுவார்கள்.

மருத்துவர்
ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை நல வைத்திய
நிபுணர், யாழ். போதனா
வைத்தியசாலை.

# இயற்கையான தூய பாலே சிறந்தது

அண்மையில் இலங்கையிலே ஊடகங்களில் வெளியாகும் பால்மாக்களுக்கான விளம்பரங்கள் தடை செய்யப்பட்டன. அவை தாய்ப் பாலின் முக்கியத்துவத்தை மறைப்பதுடன் சில தவறான சுகாதாரத் தகவல்களையும் வழங்குவனவாகவுள்ளதே இதற்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்தால் குழந்தைகளுக்கு வழங்கக் கூடிய மிகவும் பாதுகாப்பானதும் அத்தியாவசியமானது மான பால் தாய்ப் பாலே ஆகும். இதனாலேயே பிறந்து முதல் ஆறுமாதம் வரை குழந்தைக்குத் தாய்ப் பால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. ஆறு மாதத்துக்குப் பின்னர் மற்றைய உணவுகளை அறிமுகப்படுத்தும் போதும் தாய்ப்பாலை இயன்றளவு தொடர்ந்து வழங்குதல் அவசியம்.

செயற்கையான பால் மாவகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு குழந்தைக்குத் தாய்ப் பாலே சிறந்தது. தாய்ப் பால் குழந்தைக்கு நோயெதிர்ப்புச் சக்தியை வழங்குவதுடன் ஒவ்வாமைகள் ஏற்படுவதிலிருந்தும் பாதுகாக்கின் றது. மேலும் பல நோய் நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதிலிருந்தும் (உதாரணமாக ஆஸ்துமா, நீரிழிவு நோய், அதீத உடல் நிறை) பாதுகாக்கின்றது.

மேலும்குழந்தைக்குத்தேவையான சகல ஊட்டச் சத்துக்கள் கொண்டிருப்பதுடன் குழந்தைக்கு இலகுவில் சமிபாடடையக்கூடியதாகவும் உள்ளது தாய்ப் பாலே ஆகும். தாய்ப்பாலூட்டுவதால் தாய்க்கும் குழந்தைகளுக்குமான இணைப்பு அதிகரிப்பதோடு இருவரது உளநலமும் விருத்தியடைகின்றது.

வளர்ந்தவர்களும் பால்மாக்களுக்கு பதிலாக இயற்கையான தூய பசுப் பாலையோ அல்லது ஆட்டுப்பாலையே பருகுதல் சிறந்ததாகும். பால்மா தயாரிப்பின் போது பயன்படுத்தப்படும் ஓமோன்கள் மற்றும் பதப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் மிகவும் ஆபத்தானவை. இவ்வாறான ஆபத்தான இரசாயனப் பதார்த்தங்களற்ற நிறை ஊட்டச்சத்துக்கள் அடங்கிய இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பாலை அருந்துவதே ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஏற்ற வழியாகும்.

கொழுப்பகற்றப்பட்ட பால் மாவுடன் ஒப்பிடும் போது இயற்கைப் பாலில் கொழுப்புச் சத்து அதிகமாகக் காணப்படினும் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படும் ஆபத்துடன் ஒப்பிடும் போது இது குறைவானதேயாகும்.



மருத்துவர் சிற்றம்பலம் சகிலா,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

புரட்டாதி-20 திங்கட்கிழமை 06.10.2014
திதி: திரயோதசி மு.இ.09.21 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப.01.14 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32-09.02 வரை



**மேடம்**: உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.



**இடபம்**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் பெரிய நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தம் செய்வதன் மூலம் உங்கள் நிறுவனத்தின் புகழ் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் சில அறிவுரைகள் தருவார்கள்.



**மிதுனம்**: கடந்த காலத்தில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், சிறுசிறு அவமானங்களை நினைத்து தூக்கம் குறையும். சாதாரணமாக பேசுவதைக் கூட சிலர் குதர்க்கமாக புரிந்து கொள்வார்கள்.



**கடகம்**: உங்களுடைய அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**சிங்கம்**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் கிடைக்கும்.



**கன்னி**: ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவீர்கள்.



**துலாம்**: முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**விருச்சிகம்**: உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உறவுகள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.



**தனுசு**: எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தள்ளிப் போன விடயங்கள் முடியும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**மகரம்**: யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்திற்கு ஆளாவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.



**கும்பம்**: மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.



**மீனம்**: உணர்ச்சிபூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவுபூர்வமாக செயற்படுவீர்கள். பிள்ளைகளால் உறவுகள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 7 | | 3 | 9 | 5 | | |
| 9 | | | | 4 | | | | |
| | 4 | 8 | 5 | | | 7 | 1 | |
| 8 | | 1 | | | | | 3 | |
| 2 | | 4 | 3 | | 8 | 6 | | 1 |
| | 3 | | | | | 4 | | 7 |
| | 1 | 2 | | | 3 | 8 | 9 | |
| | | | | 1 | | | | 3 |
| | | 3 | 6 | 8 | | 1 | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 5 | 9 | 4 | 1 | 2 | 3 | 6 |
| 3 | 6 | 9 | 7 | 8 | 2 | 1 | 5 | 4 |
| 1 | 4 | 2 | 6 | 5 | 3 | 7 | 9 | 8 |
| 7 | 8 | 6 | 1 | 9 | 5 | 4 | 2 | 3 |
| 5 | 9 | 3 | 8 | 2 | 4 | 6 | 7 | 1 |
| 4 | 2 | 1 | 3 | 7 | 6 | 9 | 8 | 5 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 9 | 8 | 1 | 7 |
| 9 | 1 | 8 | 4 | 3 | 7 | 5 | 6 | 2 |
| 6 | 5 | 7 | 2 | 1 | 8 | 3 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுக்ப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## சிவராஜா நிசாந்

**BSc in Visual Communication (vels university India)**



யாழ்ப்பாணம், 49/1, கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சிவராஜா நிசாந் 01.10.2014 அன்று அகால மரணமானார்.

அன்னார் சிவராஜா (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், சென். பரியோவான் கல்லூரி) - குமுதினி தம்பதியரின் மூத்த புதல்வனும், பிரசாந்தின் (லண்டன்) அன்புச் சகோதரனும், அச்சுதம்பிள்ளை (ஓய்வு பெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி), ரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்-யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்), வசந்தன் - சாந்தினி (கனடா), மாலினி (ஆசிரியர் - சன்மார்க்க மகாவித்தியாலயம்), தம்புச்சாமி - பாமினி (அமெரிக்கா), சுபாசினி - விமலன் (கனடா), காலஞ்சென்றவர்களான கனரட்ணம் - சரஸ்வதி மற்றும் குணரட்ணம் - சிவயோகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், ரகுலேந்திரன், ரகுலேஸ்வரி, ரவீந்திரன், பிரேமரஞ்சினி (கனடா), ரவிச்சந்திரன், ராகினி (கனடா), ராஜசேகரம், சுபாசினி, (கனடா), காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - கனகம்மா, முருகையா-யோகேஸ்வரி, முத்துக்குமார் மற்றும் பவளம், குமரேசன் - நாகேஸ்வரி, தியாகலிங்கம் - புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும், கார்த்திகா (முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி), நிரோஷ் (Excutive Officer, Rocell), அபிராமி, சிந்துரா, சயன், சரண், ஹாசினி, சைலா, சதீஸ், கனிஷ்ரன், சரணியா, தர்சிகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், தினேஷ், காயத்திரி, உமேஷ், அஜித், ஆகாஷ், ஜனனி, தருணி மற்றும் அருந்திரா, சுவேந்திரா, கனிஸ்ரா, ஸ்ரீஜனககன், ஷர்மிலா, சாந்தகுமாரி, சசீலன், சசிக்குமாரி, குணசீலன், செல்வகுமாரி, சர்மிலா, கோபிக்கிருஷ்ணன், அருட்குமரன்; சாருஜன், வியாசன், சஜித்தனா, திலக்ஷன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 399 5716
077 778 6654

49/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(52833) (45.6.3)


இல. 1
குறைந்த கலோரி
சீனி சேர்வை
சுவையை அறியாமல்
இருப்பது எவ்வாறு?
Sugar Free Natura
இனிப்பான உணவுகளை உண்ணும் ஆசையை நிறுத்துவது எப்படி? நீரிழிவு
நோய் வரலாம் என்ற பயத்தில் இவற்றை சாப்பிடுவது கனவாகவே இருந்தது.
ஆனாலும் இப்போது
சுகர் பிரீ நசுரா மேலாதி சீனி
இருப்பதால் மேலதிக சுவை உணவு வகை மட்டுமல்லாமல் சீனி கலக்காமல்
தேநீர் அருந்தினாலும், இனிப்பாக மனதுக்கு பிடித்தவிதமாக தேநீரையும்
குடிக்கலாம். அதுமட்டுமா? உடல் எடை கூடாததால் நான் இளமை அடைந்து
விட்ட புதுத் தெம்பை உணர்கின்றேன்.
பக்க விளைவு இல்லாத
சுக்ரலோஸ்
சுகர் பிரீ நசுரா
சீனி இல்லாமல் சுவைத்திட
Surelife
சந்தைப்படுத்தல் Sunshine Healthcare Lanka Limited
முன்னணி பாமசிகளிலும் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு: 011 470 2500
ரூபா. 275 தொடக்கம்
(C/16685)


Mahindra
Rise.
ஒக்டோபர் மாதத்தில்
மஹிந்திரா ரோடியோ உடன்
பூரண காப்புறுதி மற்றும்
பதிவுசெய்தல் இலவசம்
Mahindra RODEO RZ
LET'S DO MORE
உறுதிமிக்க Z சீரிஸ் 125cc எஞ்சின்
மொபைல் சார்ஜர்
சிறப்பியல்புகள் பலவற்றுடனான டிஜிட்டல் டேஷ் போர்ட்.
வசதிக்காக முன்பக்க எரிபொருள் நிரப்பி
185,670/-
2 வருட அல்லது 20,000 கிலோமீற்றர்
வரையிலான உத்தரவாதம்
(C/16686)
www.mahindratwowheelers.com
விஷேட விசிங் வசதிகள்
ஷன்சு மோட்டர்ஸ் - யாழ்ப்பாணம்
0777 310 414
ஐடியல் டு வீலர்ஸ் தனியார் நிறுவனம்
இல: 611, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி: 0112 221 222
பெக்ஸ் 0112 221 223
IDEAL 2 Wheelers

# இனங்களுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்த பாடுபட்டவர்களில் ஒருவர்

## மறைந்த மாக்சியவாதி பாலாதம்புவின் நினைவுக் கூட்டத்தில் அருட்தந்தை ஜெயசீலன் கருத்து

இனங்களுக்கிடையே சமத்துவம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் 1970களில் அனைவருடனும் நெருங்கிப் பழகிய ஒருவராகவும் இலங்கையில் இடதுசாரி சிந்தனைகளில் வீழ்ச்சி ஏற்பட்ட வேளைகளில் தனது செயற்பாடுகளாலும் மாக்சிய சிந்தனைகளாலும் எழுச்சி கண்டவர் மறைந்த எமது தோழர் பாலாதம்பு. இவ்வாறு குறிப்பிட்டார் அருட்தந்தை ஜெயசீலன்.

இடதுசாரி இயக்கத்தின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவரும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க முன் னாள் செயலாளருமான பாலாதம்பு நினைவுக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந்தநிகழ்வுக்கு தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அருட்தந்தை ஜெயசீலன் இவ்வாறு குறிப்பிட்டார்.

> மனிதத்துவத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அதனை நிர்ணயிக்கும் தொழிற் சங்கத்துக்காக எனது இறுதி மூச்சுவரை போராடுவேன் என்று அடிக்கடி குறிப்பிட்டு அதனை செயற்படுத்திக் காட்டியவரும் பாலாதம்புதான்

நிகழ்வில் கலந்து கொண்ட அமரர் பாலாதம்புவின் நெருங்கிய நண்பரும் முன்னாள் பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் அலுவலருமான ஜெகநாதன் பேசுகையில்:

தொழிலாளர் நலனுக்காக குரல் கொடுத்து அரசை ஆட்டம் காண வைத்தவர் பாலாதம்பு. அவருடைய கருத் துக்களை ஏற்றுக்கொள்ளாமல் அவரை நிர்வாகம் பணி நீக்கம் செய்து பின்னர் நிர்வாகமே இவரிடம் மன்னிப்புக் கேட்டு பணியில் ஈடுபடுமாறு கோரிய வேளையில் தனது கோரிக்கைகளில் விடாப்பிடியாக நின்று நிர்வாகத்தின் கோரிக் கையையும் தனது அரச பதவியையும் தூக்கி எறிந்தவர்.

மனிதத்துவத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அதனை நிர்ணயிக்கும் தொழிற் சங்கத்துக்காக எனது இறுதி மூச்சுவரை போராடுவேன் என்று அடிக்கடி குறிப்பிட்டு அதனை செயற்படுத்திக் காட்டியவரும் பாலாதம்புதான் என்று குறிப்பிட்டார்

இந்த நிகழ்வில் சிமெந்து ஊழியர் சங்கத்தின் முன் னாள் தலைவர் எல்.கணபதிப்பிள்ளை, முன்னாள் வங்கி ஊழியர் சங்க அமைப்பாளர் தா.குகணேசன், தொழிற் சங்க உறுப்பினர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி)







## மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, ஒக்.5

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா அருகம் புல்வெளிய பாடசாலையின் தரம் ஒன்று, தரம் 2 இல் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு தமிழ் விருட்சம் அமைப்பால் கற்றல் உபகரணங்கள், பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் சந்திரகுமார் (கண்ணன்), பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி வவுனியா மாவட்ட பிரதித் திட்ட பணிப்பாளர் டி.எ.டி. ரஞ்சித், அதிபர் ஜானக உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-421)



மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...

## தொழில் பிணக்கு முறைப்பாடுகள் 62

யாழ்ப்பாணம்.ஒக்.5

யாழ்.மாவட்டத்தில் தொழில் பிணக்குகள் தொடர்பாக 62 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 7 பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களின் சம்பள நிலுவைகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமை தொடர்பில் தொழிலாளர்களால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டதன் அடிப்படையில் இதுவரை 7 பிணக்குகள் தீர்க்கப்பட்டு 65 ஆயிரத்து 800 ரூபா ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தீர்க்கப்படாத பிணக்குகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளும் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு தொடர்புடைய தொழில் தருநர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கான பிணக்குகள் தீர்க்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

## கௌரவம் மிக்கவராகத் திகழுங்கள்

25 வருட காலமாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும், அந்தரங்கத்தையும் பேணிப் பாதுகாத்த பாரம்பரியத்தைக் கொண்ட எமது நிறுவனம், ஆசிய நாடுகளில் மிகவும் ஆழமாகத் தடம் பதித்துள்ள மாபெரும் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கொள்வது எமது முன்னோக்கிய பாதையில் முதல் நடவடிக்கையாகும்.

இன்று நாம் AIA ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 90 வருட கால பாரம்பரியத்தைக் கொண்ட நிறுவனமாக வந்துள்ளோம். 159 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் (31 மே 2014 அன்று) என்ற அடித்தளத்தின் பலத்தையும், 28 மில்லியன் பெறுமதிய்ய தனி நபர் ஆயுள் காப்புறுதிதாரர்களையும் கொண்ட ஒரு அமைப்பாக விளங்குகின்றோம். ஆர்வமும், உணர்ச்சியும் கொண்ட எமது குழுவினருடன் இணைந்து, சுபீட்சமான எதிர்காலத்தினை நோக்கி தொடரும் ஒரு அங்கத்தவராக வர விரும்பும், முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டவர்களுக்கு, உலக தரம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் காத்திருக்கின்றன!

### விற்பனை அதிகாரி - Bancassurance

எமது குழுவில் நீங்கள் அங்கத்தவராகியதும், புகழ்பெற்ற எமது பங்காளித்துவ வங்கிகளின் கிளைகளில் நீங்கள் கடமையாற்றுவீர்கள். உங்களது கடமைகளில் வங்கிக் கிளையுடன் ஒன்றிணைந்து செயற்படல், வாடிக்கையாளர் எண்ணிக்கையை அதிகரித்தல், கிளையின் காப்புறுதி விற்பனை இலக்கை அடைவதற்கான பொறுப்புணர்ச்சியுடன் எமது காப்புறுதித் திட்டங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கல் என்பன உள்ளடங்கும்.

### திறமையானவர் மத்தியில் நீங்களும் பிரகாசிக்க உங்களுக்குத் தேவையானவை:

- விற்பனைக்கும் சந்தைப்படுத்தலுக்குமான ஆர்வமும், திறமையும்
- கண்ணியமான தோற்றம், கலந்துரையாடும் திறன்
- சிறந்த பாடசாலை சாதனைகள், கல்விசாரா நடவடிக்கைகளில் ஈடுபாடு
- கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் மிகச்சிறந்த கல்வித் தகைமை
- தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமையுடன், சரளமான தொடர்பாடல் திறமைகள்
- விற்பனைத் துறையில் ஒரு வருட அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, கவர்ச்சிகரமான கொடுப்பனவு, முன்னேற்றத்திற்கான எல்லையற்ற சந்தர்ப்பங்களுடன்கூடிய வெகுமானம் கொண்ட தொழில், பல்தேசிய நிறுவனம் ஒன்றினாலேயே வழங்கக்கூடிய அதி உன்னத தனி நபருக்கான அதிஷ்டவாய்ப்புகள் என்பன வழங்கப்பட இருக்கின்றன. மிகச்சிறந்தவர்களுள் ஒருவராக வருவதற்கு நீங்கள் தயாராக இருந்தால், உங்களது சுயவிபரக் கோவையை பணிப்பாளர் - மனிதவளங்கள், AIA இன்ஷ்வரன்ஸ் லங்கா பீஎல்சீ, இல.75, குமாரன் ரட்ணம் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அல்லது lke_vacancies@aia.com க்கு 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும். அல்லது aialife.com.lk என்ற இணையத்தளத்துடன் தொடர்புகொள்ளவும்.

(C/16684)

Issued by AIA Insurance Lanka PLC (Co No PQ 18) 10/2014



HRP HRM AWARDS 2012 Gold Award Winner

GREAT PLACE TO WORK Best companies to work for 2013 Sri Lanka

aialife.com.lk

AIA THE REAL LIFE COMPANY



# JOIN SRI LANKA'S #1 SERVICE TEAM

நாம் எதனை எதிர்பார்க்கின்றோம்?

இலங்கையின் முதன்மையான இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகிய நாம் ஆற்றல் மிக்க தனிநபர்களை, அபூர்வமான குழுச் செயற்பாட்டாளர்களை தேடுகின்றோம். இப் பிராந்தியங்களில் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை அடிப்படையிலான பிரசன்னத்தை பலப்படுத்தும், சீரமைக்கும் புத்தாக்க தீர்வுகளை வடிவமைத்து வழங்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

## இணை பிராந்திய முகாமையாளர் - தேசிய விற்பனைகள்
சிறிய மற்றும் நடுத்தர வியாபாரம் வவுனியா/யாழ்ப்பாணம்

### முக்கிய பொறுப்புக்கள்

- ஒட்டு மொத்த பிராந்திய விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்காக விற்பனை அணியினை முகாமை செய்தல் மற்றும் முன்னோக்கி வழிநடாத்தல்
- முகாமைத்துவத்தினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த/காலாண்டு/வருடாந்த அடிப்படையிலான விற்பனை இலக்கினை பெற்றுக் கொடுத்தல்
- விற்பனை அணியானது தீர்வுகளை வடிவமைப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆதரவளித்தல் மற்றும் விற்பனை செயன்முறையை முகாமைத்துவம் செய்தல்
- தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிராந்தியத்தில் உள்ள அனைத்து முக்கிய வாடிக்கையாளர்களுடனும் சிறந்த உறவை பேணுதல்
- எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விற்பனை அணியினை பயிற்றுவித்தல்/வழிநடாத்தல் மற்றும் ஊக்கமளித்தல்
- நிறுவனத்தின் கடன் கொள்கைக்கு அமைவாக கொடுப்பனவுகள் கிடைக்கப் பெற்றமையினை உறுதிப்படுத்தல்

### நபரின் தகமை விபரம்

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பகுதிநேர/முழுநேர டிப்ளோமா கற்கையினை பூர்த்தி செய்திருத்தல்
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் 'வியாபாரத்திலிருந்து-வியாபாரம் (B2B) விற்பனைகளில் ஆகக் குறைந்தது 3-5 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் அவசியமாகும்
- அணி ஒன்றை முன்னோக்கி வழிநடாத்துவதற்கான மிகச் சிறந்த தலைமைத்துவ திறன்களை கொண்டிருத்தல்
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மிகச் சிறப்பான தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் (சிங்கள மொழி மேலதிக தகமையாக கொள்ளப்படும்)
- பெறுபேறுகளை இலக்காக கொண்டு செயற்படும், சகஜமாக பழகக்கூடிய நபராக இருத்தல்

## வணிக இணைப்பாளர் - தேசிய விற்பனைகள்
சிறிய மற்றும் நடுத்தர வியாபாரம்
யாழ்ப்பாணம்/வவுனியா/கிளிநொச்சி/மன்னார்

### முக்கிய பொறுப்புக்கள்

- முகாமைத்துவத்தினரால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த/காலாண்டு/வருடாந்த அடிப்படையிலான தனிப்பட்ட விற்பனை இலக்கினை பெற்றுக் கொடுத்தல்
- தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களோடு ஈடுபாட்டுடன் செயற்படுதல் வேண்டும். அதன்மூலம் கிடைக்கப் பெறும் பரிந்துரைகளின் ஊடாக புதிய விற்பனைகளை உருவாக்க கூடியதாக இருத்தல் வேண்டும்
- நிறுவனத்தின் கடன் கொள்கைக்கு அமைவாக அனைத்து கொடுப்பனவுகளும் கிடைக்கப் பெற்றமையினை உறுதிப்படுத்தல் அத்துடன், தேவை ஏற்படும் பட்சத்தில் கொடுப்பனவு சேகரிப்பு அணிக்கு உதவிகளை வழங்குதல்
- அனைத்து ஊழியர்களுடனும் மிகச் சிறந்த உறவொன்றை பேணி வருவதுடன், அவசியம் ஏற்படும் பட்சத்தில் 'குறுக்குமாறல்-செயற்பாடு' (Cross-Functional) அடிப்படையிலமைந்த ஆதரவை அளித்தல்

### நபரின் தகமை விபரம்

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் அல்லது தகவல் தொழில் நுட்பத்தில் பகுதிநேர/முழுநேர டிப்ளோமா கற்கையினை பூர்த்தி செய்திருத்தல்
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் 'வியாபாரத்திலிருந்து-வியாபாரம் (B2B) விற்பனைகளில் ஆகக் குறைந்தது 1-2 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் அவசியமாகும்
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மிகச் சிறப்பான தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் (சிங்கள மொழி மேலதிக தகமையாக கொள்ளப்படும்)
- பெறுபேறுகளை இலக்காக கொண்டு செயற்படும், சகஜமாக பழகக்கூடிய நபராக இருத்தல்

(C/16686)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பரப்பை உடைய பணியை மேற்கொள்வதற்கான தகமைகளை நீங்கள் கொண்டிருப்பதாகவும், அவசியமான பண்புகள் உங்களிடம் காணப்படுவதாகவும் நீங்கள் கருதினால், இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் careers@dialog.lk எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Dialog
எதிர்காலம் இன்றே.

# குன்றும் குழியுமாக பூநாறி வீதியின் நிலை



யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியை அண்டிய பூநாறி வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் அந்த வீதியை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் உட்பட பலர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த வீதியிலுள்ள பல கிளை வீதிகள் சந்திக்கும் இடங்களில் குழிகள் அதிகம் காணப்படுவதால் அந்தக் குழிகளில் இருந்து விலகிச் செல்லும் நோக்கில் பயணித்தவர்கள் பலர் எதிர்பாராத விபத்துகளில் சிக்கிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித் தனர்.

எனவே, குறித்த வீதியைப் புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)




# தேர்தலை எதிர்கொள்வதற்கு போர்க்கால வேக நடவடிக்கை

## ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன

கொழும்பு, ஒக். 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு போர்க்கால வேகத்தில் கட்சியின் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதன் ஒருகட்டமாக கட்சியின் அனைத்துத் தொகுதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் ஸ்ரீகொத்தாவில் குழுவொன்று பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தந்த தொகுதிகளின் உடனடி நிலவரம், அரசுக்கு சார்பான மற்றும் எதிரான நிலவரங்கள் குறித்து நாளாந்தம் இந்தக்குழுவுக்கு அறிக்கை அனுப்புமாறு கட்சித் தலைமையிலிருந்து சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனஜய செயற்திட்டத்தை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்து ஊவா மாகாண சபைத் தேர்தலில் கட்சி பெற்றுள்ள முன்னேற்றம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கவும் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஆளுங்கட்சியின் மீது அதிருப்தி கொண்டுள்ள அதன் ஆதரவா ளர்களை ஐ.தே.க.பக்கம் இழுத்தெடுக்கும் வகையிலான நடவடிக்கை ஒன்றையும் முன்னெடுக்க கட்சியின் தலைமைத்துவக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் ஒன்றை ஐ.தே.க.வின் தலைமைத்துவக்குழு வரும் 10ஆம் திகதி நடத்தவுள்ளது என்றும் ஸ்ரீகொத்தா வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (ற)

# ஊழல் சுறாக்களை விடவும் நெத்தலிகளே சிக்குகின்றன

## தலதா அத்துகோரள எம்.பி. கூறுகின்றார்

> ஆணைக்குழு ஊழலில் ஈடுபடும் நெத்திலி மீன் போன்ற சிறு நபர்களை கைது செய்த போதிலும் சுறா போன்ற பெரும் ஊழலில் ஈடுபடுபவர்களை கைது செய்வதில்லை.

கொழும்பு, ஒக்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நெத்திலி மீன்களை பிடித்தாலும் ஊழலில் ஈடுபடும் சுறா மீன்களை பிடிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் மக்கள் முறைப்பாடுகளை செய்கின்றனர். குற்றம் சுமத்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற நிலைப்பாடு கட்டியெழுப்பட்டுள்ளது. எனினும், ஆணைக்குழு ஊழலில் ஈடுபடும் நெத்திலி மீன் போன்ற சிறு நபர்களை கைது செய்த போதிலும் சுறா போன்ற பெரும் ஊழலில் ஈடுபடுபவர்களை கைது செய்வதில்லை.

சுதந்திரமான இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு இருக்குமாயின், இவ்வாறான கவலைக்குரிய நிலைமை ஏற்படாது. டி.யூ. குணசேகர தலைமையிலான நாடாளுமன்ற பொதுக்கணக்கு தெரிவுக்குழு அறிக்கையை வெளியிட்டுள்ள போதும் ஊழலில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் இல்லை. அதனால், தொடர்ந்தும் அவர்களில், இலஞ்ச, ஊழல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை அரசு நிர்மாணிக்கும் பெருந் தெருக்களுக்கான செலவுகளில் 35 வீதமான பணம் பல்வேறு நபர்களுக்கு தரகு பணமாக செல்கிறது"- என்று தெரிவத்துள்ளார். (ற)



# நீரிழிவு நோயாளர்கள் இருவர் இனங்காணப்பட்டனர்

## விடத்தற்பளை மருத்துவ முகாமில்

தென்மராட்சி, ஒக்.5

சாவகச்சேரி மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரால் விடத்தற்பளை கிராம மக்களுக்காக நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் இருவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட் டிருந்தமை இனங்காணப் பட்டது. அவர்களை சாவகச்சேரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட நீரிழிவு, கண், இரத்த அமுக்கம் உட்பட்ட மருத்துவ பரிசோதனைகளில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 50 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டன. மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் தலைமையிலான மருத்துவக் குழுவி னரால் மாதாந்தம் கிராமப் புறங்களில் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனை முகாமில் கடந்த இரண்டு வருடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)









நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சி நெறிகள் (வார/வார இறுதி நாட்கள்)
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
- வயதுவந்த மாணவர்களுக்கு மேற்கோள் நூலகத்திற்கு இலவச அங்கத்துவம்.

ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கும் பயிற்சி நெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு:
  வயதுவந்தவர்களுக்கு(16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு)
  ஆள் ஆடையாள அட்டை/கடவுச்சீட்டு

  பிள்ளைகளுக்கு (6 - 15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு)
  உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 800. இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

பிரிட்டிஷ் கவுன்சில், 70 ரக்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 7521521
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0900 - 1800

நாம் மேலும் கொழும்பிலும் கண்டியிலும்

www.britishcouncil.lk

(C/16684)

# சிவன் முதியோர் இல்லத்துக்கு இரு தறப்பாள்கள் அன்பளிப்பு



வவுனியா, ஒக்.5

முதியோர் தினத்தை முன்னிட்டு வவுனியா கோவில்குளம் சிவன் கோவில் சிவன் முதியோர் இல்லத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பெறுமதியான இரு பெரிய தறப்பாள்கள் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் மு.சொக்கலிங்கம் நினைவாக முதியோர் இல்லத்துக்கு புதன்கிழமைவழங்கிவைக்கப்பட்டன. இரு பெரிய தறப்பாள்களையும் தமிழ் விருட்சம் சமுக ஆர்வலர்கள் அமைப்பின் சந்திரகுமார் (கண்ணன்); மாணிக்கம் ஜெகன் மற்றும் ஊடகவி யலாளர் கபில் ஆகியோர் சிவன் முதியோர் இல்லத்தின் நிர்வாகிகளில் ஒருவரான ஆ.மாதவனிடமும், இல்ல பொறுப்பாளர் பா.அகிலா ஆகியோரிடம் கையளித்தனர்.

2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிவன் முதியோர் இல்லம் தற்போது 11 சிங்களவர்கள், 2 முஸ்லிம்கள், 142 தமிழர்களென மொத்தம் 155 பேருடன் இயங்கி வருவதுடன் அதில் இருவர் தம்பதிகளாக வசிப்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-422)

# ரணிலை எதிர்த்தோர் மீண்டும் கட்சிக்குள்

## பரப்புரை பொறுப்புகளும் அவர்களிடம்

கொழும்பு, ஒக். 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு சிரால் லக்திலக்க மற்றும் மைத்திரி குணரட்ன ஆகியோருக்கு வழங்கப் பட்டுள்ளது.

அது தவிர இம்தியாஸ் பாக்கிர் மாக்கர், பாலித ரங்கே பண்டார, சந்திரா கங்கானந்த ஆகியோர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சில காலம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டிருந்தனர். கட்சிக்குள் நிலவிய பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இவர்கள் செயற்குழு உறுப்பினர் பதவியை இழந்ததுடன் மீண்டும் கட்சியில் ஐக்கியம் ஏற்பட்டுள்ளதை அடுத்து இவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ற)

யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு ரூ. 42,000/-*

22 கரட்டுக்கு ரூ. 36,000/-*



ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு

எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.

கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387

L B FINANCE
எல்.பீ. பினான்ஸ் பிஎல்சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T: 011 4521 000 | www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS

(C/16687)

# திருத்தத்துக்காகக் காத்திருக்கும் பயித் தோலை வீதியின் ஒருபகுதி

அச்சுவேலி, ஒக்.5

அச்சுவேலி தெற்கு பயித் தோலை வீதியின் ஒருபகுதி உரியமுறையில் திருத்தி அமைக்கப் படாமல் கருங்கல் பரவிய நிலையில் திருத்த வேலைப் பூர்த்திக்காகக் காத்து கிடக்கின்றது. குறித்த பகுதியில் பயணம் செய்ய முடியாமல் இடறி விழுந்து தாம் நாளாந்தம் படுகாயம் அடைவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்த பயித்தோலை வீதியின் பெரும்பகுதி நெல்சிப் திட்டத்தின் மூலம் திருத்தி அமைக்கப்பட்டு தார் வீதியாக மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த வீதியின் ஒரு பகுதி 250 மீற்றர் தூரம் வரையில் கருங்கல் கொட்டப்பட்ட நிலையில் மாதக் கணக்கில் திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது.

கருங்கல் கொட்டப்பட்ட பகுதியில் வீதியின் நடுவே வழித் தடம் ஒன்றை ஏற்படுத்தி மக்கள் தமது போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர். வழித்தடத்தில் இருந்து சிறிதளவு விலகினாலும் இடறி விழ வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தநிலையில் நாளாந்தம் இடறி விழுந்து சிலர் படுகாயம் அடைகின்றனர். இந்த விடயத்தில் வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகம் கண்டும் காணாமல் இருந்து வருவதாக வரியிறுப்பாளர் மற்றும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியால் வெள்ளம் பெருமளவில் பாய்வதால் குறித்த பகுதிக்கு சிமெந்து கொங் கிறீற் இட்டு சிமெந்து வீதியாக மறுசீரமைப்பு செய்யுமாறு பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் பரிந்துரை செய்துள் ளதுடன் உலக வங்கி நிபுணர் குழுவும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்று கூறப்படு கின்றது.

வீதியை சிமெந்து வீதியாக மறுசீரமைப்பு செய்வதற்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள் உட்பட ஆளுந் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்களும் தமது விருப்பத்தை தவிசாளருக்குத் தெரி வித்துள்ள போதிலும், வீதி திருந்த வேலையை தவிசாளர் இடைநிறுத்தி இருப்பதாகக் கூறப் படுகின்றது.

பயித்தோலை வீதி பிரச்சினை தொடர்பான இழுபறி நிலை யால் கடந்த 19 ஆம் திகதி வலி.கிழக்கு பிரதேச சபைக் கூட்டம் எந்த தீர்மானங்களோ பிரேரணைகளோ மேற் கொள்ளாமல் ஒத்திவைக்கப்பட்டது. வீதித் திருத்த வேலை தொடர்பான தீர்மா னத்தை சபையில் சமர்ப்பித்து வாக்கெடுப்புக்கு விடுவதோடு, ஜனநாயக நடைமுறைக்கு அமைய தவிசாளர் செயற்படாமல் இருந்தால் சபையின் இயல்புநிலைச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று ஆளுந்தரப்பு உறுப்பினர்களின் பெரும் பகுதியினர் தவிசாளருக்கு உரிய முறையில் அறிவித் திருப்பதாக கூறப் பட்டது.

மேற்படி வீதியை திருத்தி அமைத்து பொதுமக்களின் இயல்பான பயன் பாட்டுக்கு வகைசெய் யுமாறுவடக்குமாகாண உள்ளூராட்சி அமைச் சுக்கு பொறுப்பான முத லமைச்சரின் கவனத் துக்கும் தெரியப்படுத் தப்பட்டுள்ளது. (வ-11)

# நல்லூர் பிரதேச சபையின் வாசிப்பு, சிறுவர்தின நிகழ்வு





யாழ்ப்பாணம்,ஒக்.5

நல்லூர் பிரதேச சபை வாசிப்பு மாத, சிறுவர் நிகழ்வுகளை புதன்கிழமை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தியது. கொக்குவில் பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி ஓய்வு நிலை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சந்திராதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். முன்பள்ளிச் சிறுவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-7)


இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

"தொழிற்சந்தை"

எதிர்வரும் 07.10.2014 ஆம் திகதி

மு.ப.11.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை

யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்.

அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பங்கேற்புடன் நடைபெறும்.

இத்தொழிற்சந்தையில் கலந்து கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை உரித்தாக்கிக் கொள்ளுங்கள்

தொழிற்சந்தை பார்வையிடலுக்கு
அனுமதி இலவசம்



ஏற்பாடு



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

அத்துடன், அன்றைய தினம் மாலை 4.00 மணியிலிருந்து யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்

தென்னிந்திய பாடகர்

கலாநிதி. டீ. உன்னிகிருஷ்ணன் அவர்கள்

கலந்து சிறப்பிக்கும்

"ஹம்சத்வனி"

இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து இன்புறுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

"ஹம்சத்வனி" இன்னிசை நிகழ்ச்சியினை பார்வையிடுவதற்கான நுழைவுச்சீட்டினை (TICKET) கல்லூரி நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்

ஏற்பாடு

கலை மற்றும் கலாசார அமைச்சு,
(கலாசார அலுவல்கள் திணைக்களம்)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
மற்றும்
ஜேக்ஸ் அசோஷியேட்ஸ் தனியார் நிறுவனம்

(6/16690)


# வீதிப் போக்குவரத்து தொடர்பான சட்டங்கள் குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.5

வீதிப் போக்குவரத்து தொடர்பான சட்டங்கள் குறித்த செயலமர்வு யாழ்.கனகரத்தினம் மகாவித்தியா லயத்தில் அண்மையில் நடை பெற்றது. வட மாகாண சபையும், வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்திய இந்தப் பயிற்சிப் பட்டறை யில் அரச திணைக்களங்களைச் சேர்ந்த சாரதிகள் கலந்து கொண் டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக வட மாகாண சபையின் செயலாளர் திருமதி ஆர்.விஜயலக் சுமி உட்பட பொறியியலாளர் ஈ.எஸ்.ராஜேந்திரன், வீதிப் போக்கு வரத்து ஆலோசகர் ஸ்ரீவ் ஹோகன், திருமதி ஜான்சி, பிரதிச் செயலாளர் பத்மநாதன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் வாகீ சன், இளைப்பாறிய பிரதிப் போக்கு வரத்து பொலிஸ் மா அதிபர் பேரின்பநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். வீதி அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த ஸ்ரீ.சிவ ராஜலிங்கம் நிறைவுரையாற்றி னார். வீதிப்போக்குவரத்துக்களைத் தவிர்த்தல், போக்குவரத்து தொடர் பான வழிகாட்டல்கள் விபத்துக் கான காரணங்கள், மதுபோதை வீதிச் சமிக்ஞைகளைப் பின்பற் றாமை போன்றவற்றால் ஏற்படக் கூடிய விபத்துக்கள் குறித்து சாரதி களுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட் டது. (வ-7)

வீதிப் போக்குவரத்துக்களைத் தவிர்த்தல், போக்குவரத்து தொடர்பான வழிகாட்டல்கள் விபத்துக்கான காரணங்கள், போன்ற விபத்துக்கள் குறித்து சாரதிகளுக்கு விரி வாக எடுத்துக் கூறப்பட்டது.



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கடை வாடகைக்கு

அச்சுவேலி டச்சு றோட் முஸ்லிம் ஹோட்டல் அருகில் (பஸ்நிலையம் முன்பாக) கடை வாடகைக்கு உண்டு.

தொ.பே: 077 615 8066/076 687 9640

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு:-

**அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை**

இன்பமதன் மதுஷியா -177.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

கு.சக்திகரன்-176, சி.ஆர்த்தியா-172, கு.ஹரிகரன் -171, செ.கோகுல்ராஜ்-171, ச.ஆத்மிகா-169, ம.லுட்சியா-166, ம.ஆரூரன்-160.

**சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

இ.அலெக்ஷா-164, சு.திரிஷாளினி-160.

## ICEMAN Technologies (Pvt) Ltd.,

Unrivalled leader in complete cold chain solutions

சகல குளிர் சாதனங்களுக்குமான மொத்த தீர்வு வழங்குநர்

நமது பலம்


1. சுடு இணையற்ற அனுபவம் வாய்ந்தவர்களை கொண்டது.
2. உலக தரத்திற்கான தயாரிப்புகள் - சிறந்த கூட்டுறவாளர்கள்
3. வாடிக்கையாளர்கள் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்பட்டது மொத்த தீர்வுக்கான உத்தரவாதம்
4. நற்தகைமையுள்ளோர், கடல் கடந்த நாடுகளில் பயிற்சியும், அனுபவமும் பெற்ற தொழில் நிபுணர்கள்
5. 24 மணித்தியாலம் / 365 நாட்கள் / வாரந்தோறும், திருத்த வேலைகள் செய்து தரப்படும்
6. நவீன முறைப்படி அமைக்கப்பட்ட Work Shop, சகல விதமான உதிரி பாகங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டது.
7. தொடர்ச்சியான ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

**Sales Inquires**
**0112239444 | 0777237546**

45, St.Theresa Mw., Rilaulla, Kandana 11320, SRI LANKA.
No.04, Krishnapillai Road, Eachchamodda, Jaffna.
Fax: 011 4830819, E-mail: suresh@icemanlk.com
www.icemanlk.com

GEA Copeland Carrier LU-VE HEATCRAFT incold

(52842)





## சாயி சங்கீதா



சகல விதமான இசைக்கருவிகளையும் தற்பொழுது யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம். (52818)


தொடர்புகளுக்கு...
ILE SUPPLY CHAIN CENTRE
இல. 320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0773608642 / 0776349054 / 021 221 7408

## இனி இல்லை நெஞ்சுவலி !!!

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகு வலி
- புரோஸ்ட்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சினைகள்
- மனஅழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரிழிவுப்புண்கள்
- நச்சுவைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

நெஞ்சுவலி நீங்கி நலமான வாழ்வைப்பெற முடியும். எமது மருந்து இருதய இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். சிக்கலான சிகிச்சை அவசியமில்லை.

இருதய அடைப்பின் அறிகுறி
- நெஞ்சில் இறுக்கம்
- நெஞ்சில் எரிவு, மனஎழுச்சி
- சுவாசக்குறைவு
- நெஞ்சுவலி




FAIR PHARMA (PVT) LTD Sponsored by
(Kerala Ayurvedic Medicine)
0114 388101, 4 388102

Free Consultation
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m. - 5.00 p.m.
Saturdays 9.00 a.m. - 2.00 p.m.
Monthly Clinics are conducted islandwide

Ceylinco House, 11th Floor, No: 69, Janadhipathi Mawatha, Colombo 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 330 / 0777 708 310
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY (சி.16904)

## அழகுக்கலை பயிற்சி

சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ் சேவை நிலையத்தினால் தீபாவளியை முன்னிட்டு மிகக் குறைந்த கட்டணத்தில்...
இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப் பெற்ற ஆசிரியையினால்...

- துரித ஒரு மாத கால அழகுக்கலை பயிற்சிகள்
- டிப்ளோமா அழகுக்கலை பயிற்சிகள்
- கேக் ஐசிங் பயிற்சிகள்

அனைத்தும் மிகக் குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

அனைத்து பயிற்சிகளும் இந்திய முறைப்படி கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பிரிவு 1: 09.10.2014 அன்று 10.00 மணிக்கு
பிரிவு 2 : 11.10.2014 அன்று 10.00 மணிக்கு

குறிப்பு: பயிற்சியை நிறைவு செய்த பழைய மாணவர்களும் இப்பயிற்சியில் இணைந்து கொள்ளலாம்.

பதிவுகளையும் மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ள 11.10.2014 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் வருகை தரவும்.
நிறுவன அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு தொடர்புகொள்ள - 021 454 6026

ஒறிபிளேம் 616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தியில்)

(52829)(7.6.3)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி
செல்வி சுபாங்கி திருமாறன்
2014 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு, மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்.
கைலாயபிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(52848)(5.6.3)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்று 2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 161 புள்ளிகள் பெற்று எமக்கும் பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்த
**தர்மச்சந்திரன் விசாலன்**
அவர்களை வாழ்த்துவதுடன், அவர் தன் எதிர்கால வாழ்க்கையில் மேன்மேலும் பல சித்திகளைப் பெற்று பெருமைகள் பெற இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது மனமார்ந்த பாராட்டுக்களும் உரித்தாகுக.

பாராட்டுவோர்:
அம்மம்மா, அம்மா, அப்பா, சகோதரர்கள்.




## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்


MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm



(சி.16902)

Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்

வருகின்ற தீபாவளியை முன்னிட்டு ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும் அனைத்து விதமான ஆடைகள், பான்சிப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில் இருந்து அரைவாசி விலைக்கு பெற்றுக்கொள்வதுடன் 3, 4, 5 ஆகிய திகதிகளில் 3000/= ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9393

(52808)(7.6)





## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவன்
**சிவகுமார் ஹரிஹரன்**
இவ்வாண்டு (2014) தரம்-5 புலமைப்பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் கல்வியில் மேன் மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பூட்டி, அம்மம்மா, தாத்தா, சித்தி, சித்தப்பா, தம்பி, தங்கை, அண்ணன்மார், மச்சான்மார், மாமா-மாமி, அம்மம்மாமார், சித்திமார், மாமாமார், அப்பா-அம்மா.



## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினா இராஜேந்திரம்



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சிற்றம்பலபுரம், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா இராஜேந்திரம் 03.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (இராசையா) - மேரி மாகிறேற் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், அ.மரியாம்பிள்ளை இராஜேந்திரத்தின் (ஓய்வுநிலை அதிபர்) ஆருயிர் மனைவியும், றெஜினோல்ட் - ரெறன்ஸ் (ஜேர்மனி), றுஷியந்தி (கனடா), றொசற் (முகாமையாளர், மக்கள் வங்கி, அச்சுவேலி) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஷீலா (ஜேர்மனி), ஜூலியன் (கனடா), தவநாயகம் (அதிபர், யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்.) ஆகியோரின் அன்பு மாமியும், றுபீட்ஷா, றொட்வின், ஜெனிவர், ஜெனற், நிவாஷனா, நிதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற றெஜினா மற்றும் பிறிஜிற் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சேர் சிற்றம்பலம் கார்டினரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.10.2014) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்க ஆராதனையுடன் சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கானை வீதி, அச்சுவேலி. (52886) (12.3.6)

தகவல்: A.M.இராஜேந்திரம் (கணவர்)
077 056 9619/021 205 8548

# இயன் மருத்துவ சிகிச்சைக்காக நோயாளர்கள் அதிகரிப்பு

தென்மராட்சி,ஒக்.5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இயன் இயக்க மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்கள் மற்றும் நோய்களினால் இடுப்பு, கை, கால்களில் ஏற்படும் நரம்புப் பாதிப்புகளுக்கு இந்தப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுவதால் தென்மராட்சிப் பிரதேசம் உட்பட பல பிரதேசங்களிலிருந்து நோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தப் பிரிவுக்கெனத் தனியான இயன் மருத்துவர் கடமையாற்றுவதால் சிகிச்சைபெறப் பலர் வருகை தருவதைக் காணமுடிகிறது.

கடந்த மாதத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் இந்தப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## குருபூசை தினம்

உடுவில்,ஒக்.5

உடுவில் கிழக்கு - கடவுள் சுவாமிகளின் சந்நிதியில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஸ்ரீ சிவபாக்கிய மலரம்மையாரின் 3ஆம் வருட குருபூசைத்தினம் கொண்டாடப்படும். கடவுள் சந்நிதியில் விசேட பூசை வழிபாடுகள், பஜனைகள், ஆத்மிக சொற்பொழிவுகள், மகேஸ்வர பூசை முதலியன நடைபெறும். (ஒ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### கந்தப்பர் சின்னையா



திதி: அமாவாசை (23.09.2014)

மலர்வு 26.06.1951

உதிர்வு 05.10.2013

ஆண்டொன்று ஓடிப்போனதப்பா
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
பாசமுள்ள எம்மைவிட்டுப் பிரிந்து
விண்ணகம் சென்றதேனோ- எம்
விழிகள் கண்ணீர் மல்க
ஏங்குகிறது உங்கள் வரவிற்காய்!
விண்ணகத்தில் இறைபதத்தை விட்டகலா
முத்திபெற உடுவில் சிவஞானப் பிள்ளையாரை
கைகூப்பி வணங்குகிறோம்.

முதலாம் கட்டை,
சந்திரபுரம், உடுவில். (52796)(45.6.3)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் தங்கராஜா (கட்டையப்பா)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வாழ்ந்து வந்தவருமான நாகலிங்கம் தங்கராஜா (கட்டையப்பா) 03.10.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பூதாத்தை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து-நாகம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், இரத்தினேஸ்வரியின் ஆருயிர் கணவரும், கனடாவில் வசிப்பவர்களான செந்தில்நாதன், செந்தில்செல்வி, செந்தில்மலர், செந்தில்செல்வன், செந்தில்குமரன், காலஞ்சென்றவர்களான செந்தில்வதனி, செந்தில்குமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினி தேவி, உதயகுமார் (நயினாதீவு), சுரேஸ்குமார் (சில்லாலை), தருமதாஷன் (கைதடி-நுணாவில்), நிமோஷினி (களுவாஞ்சிக்குடி), அருள்வதனி (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புமிகு மாமாவும், சஜீற்ரா, பவீற்ரா, பூஷணன், அலெக்ஷன், றொபின்சன், கிறிஸ்ரன், வதனதாஸ் ஆகியோரின் அம்மப்பாவும், சாதனன், அர்யுன், சாதனா, முகேஸ், மினேஸ் ஆகியோரின் அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, சின்னத்துரை மற்றும் இராசையா, அன்னபூரணம், தவமணி ஆகியோரின் சகோதரனும், கதிர்காம நாதன், இன்பநாதன், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி சிவனேஸ்வரி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை ஏழாலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: மனைவி - 021 790 3796
செந்தில் - 647 274 9912, செல்வி - 905 695 4344
மலர் - 647 522 4517, செல்வன் - 416 835 3475
குமரன் - 403 630 9580

(52891) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## சாவகச்சேரியில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம்

தென்மராட்சி.ஒக்.5

யாழ். மாவட்டத்தில் டெங்குக்கட்டுப்பாட்டு விசேட செயற்றிட்டங்கள் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு உற்பத்தி அதிகமாகக் காணப்படும் இடங்களாக இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இந்த விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 ஆம் திகதி மட்டுவில் பிரதேசத்திலும், 10 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் இந்தச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## பிற்போடப்பட்டது

தென்மராட்சி, ஒக்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த 'பிரதேச மட்ட மீள் இணக்கம்' தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஒ-9)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கார்த்திகேசு இரத்தினம்



(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம் 24.07.1927

மறைவு 23.09.2007

திதி: புரட்டாதி பூர்வபக்க துவாதசி

கடமையே கண்ணாகக் கொண்டு கடமையாற்றிய
எம் அன்புத் தெய்வம்
எம்மை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகளானதோ
உங்கள் நினைவலைகள்
என்றும் நிலைத்திருக்கும்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (52823)(12.3.6)

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி சகுந்தலாதேவி இராசலிங்கம்



சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி இராசலிங்கம் 03.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு-இராசமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், இரத்தினசபாபதி, சபாநாதன் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் பாலகிருஷ்ணன், ரூபராணி, இளங்கோவன், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, புவனேஸ்வரி, பாட்டா நடராஜா, குணநாயகி மற்றும் விமலா, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, செல்வநாயகம், கெங்காதேவி, காலஞ்சென்ற நாகராஜா ஆகியோரின் மைத்துனியும், ஜெயகாந்தன், சசிகாந்தன், கார்த்திகா ஆகியோரின் தாயாரும், பிரமிளா, சுசித்திரா, உதயகுமார் ஆகியோரின் மாமியாரும், தட்சாயினி, மதுசாயினி, டதுர்சிகா, ஆரணி, சிம்மஜி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை. (52870) (7.6.3)

தகவல்:
பிள்ளைகள், சகோதரர்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### இராஜரட்ணம் இராஜேஸ்வரி



மண்ணில் 14.09.1934

விண்ணில் 07.10.2011

அம்மா........
நிஜம் காணத் துடிக்கின்றோம்
மனம் வாடித் தவிக்கின்றோம்
முகம் காண அழைக்கின்றோம்
முடியாமல் அழுகின்றோம்
தாளாத துயரத்தில் வாடும் எங்களுக்காய்
மீளத் துயில் நீத்து வரவேண்டும் அம்மா!

இப்பிறப்பு மட்டும் இன்றி எங்கள்
எப்பிறப்பும் அம்மா நீங்கள் தான் எங்கள்
தாயாக வேண்டும்
அம்மா உங்களோடு நாங்கள் இருந்த
வசந்த காலங்கள்
எங்கள் குருதியில் கலந்து சிறந்த
நினைவுச் சின்னங்களாக
இதயம் எங்கும் சிதறிக் கிடக்கின்றன.

எங்கள் சுவாசத்தில் கலந்திருக்கும் இதய
தெய்வம் அம்மா!
உங்கள் நினைவுகள் கலையாமல்
தவிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தேவி, றஞ்சி, ராஜன், ஷாலினி, விமல் (ரஞ்சன்), சாமி, புவி, ஜெயந்தி (றோசி), கௌசலா, ஷாருஜன், ஷாரா, ஷருன், ஷஜித், ஷாலினி.





மன்னார் புனித சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்ற மாகாண மட்ட கணித நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். அதிபர், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபருடன் நாடகக் குழுவினரையும் கொழும்பு 07, புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற தேசிய மட்ட அரச சிறுவர் நாடகப் போட்டியில் பங்குபற்றிய நாடகக் குழுவினர் அதிபர், ஆசிரியர்களுடனும் காணப்படுகின்றனர். (ஓ)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்களும் பெற்றோரும் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் காணலாம். (ஓ-9)



அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அமரர் ஐ.தில்லையம்பலம் நினைவாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஓ-9)



நீர்வேலி காமாட்சி அம்பாள் கோயிலடியில் செயற்படும் தேசிய அருங்கலைகள் பேரவையின் பனையோலை பயிற்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட சுளகை வலிகிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் மற்றும் யாழ். மாவட்ட கைத்தொழில் திணைக்களப் பணிப் பாளர் கே.சிவகரன் ஆகியோர் பார்வையிடுகின்றனர். வலி.கிழக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி எஸ். பிரேமினி, நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் த.பரராசசிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஓ-11)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நிறுவுநர் சிலை திறப்பு விழாவும், புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கிக் கையளிப்பும், தமிழ் தின விழாவும் அண்மையில் நடைபெற்றன. விழாவில் அதிபர் திருமதி வி.கடம்பமலர் மற்றும் பிரதம விருந்தினராக சு.சண்முககுமாரும், சிறப்பு விருந்தினராக அ.அகிலதாஸும் கலந்து கொண்டனர். (ஓ)




வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கலைவாணி விழா நிகழ் அதிபர் ந. வசந்தரூபன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. மாண வர்களின் கவிதை, பேச்சு, குழு நடனம், காவடி நடனம், அம்மன் நடனம் மற்று மாணவர்களின் நாடகம் என்பன இடம்பெற்றன. அந்தக் காட்சிகளில் சில. (ஓ-122






















யாழ் இந்துக் கல்லூரியில் விஜயதசமி நிகழ்வும், 125 ஆண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வும் கடந்த வெள்ளிக் கிழமை சிறப்பாக நடைபெற்றன. முதன் நிகழ்வாக சிவஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வுடன் 125 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டம் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து வைரவப் பெருமானுக்கு விசேட அபிசேகம் நடைபெற்றது. இந் நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து கல்லூரியின் கே.கே.எஸ் வீதி நுழைவாயிலூடாகப் பிரார்த்தனை மண்டபத்துக்கு விருந்தினர்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. இதன் பின்னர் அங்கு விஜயதசமி நிகழ்வின் கலைநிகழ்வுகள் ஆரம்பமாகின. இந் நிகழ்வில் அதிபர் உரையும் மாண வர்களுடைய கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. இந் நிகழ்வில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாண வர்களுக்கு தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. அதன் பின்னர் இந்து மாமன்றத்தினால் நவமலர் எனும் நூல் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிவஞான வைரவர் ஆலயத்தில் ஏடு தொடக் கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கு ஏட்டினை தொடக்கி வைத்தார்கள். அதன் பின்னர் வைரவப் பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்று நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன. (ஓ)







கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் விஜயதசமி நிகழ்வின் போது ஆசிரியர் எஸ். நவனீதனால் வடிவமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் திரை நீக்கம் செய்து வைத்தார். அதிபர் ஆ.உதயணன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ஓ)



விஜயதசமி தினமான கடந்த வெள்ளிக் கிழமை பாடசாலைகள் ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் சிறு வர்களுக்கு ஏடு தொடங்கும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ். இந்து ஆரம்ப பாட சாலையில் அதிபர் சிறுவர் ஒருவருக்கு ஏடு தொடக்கலை ஆரம் பித்து வைத்தபோது. (ஓ-17)







வவுனியா மாவட்ட செயலகத்தில் நவராத் திரி விழா சிறப்பாக நடைபெற்றது. பூசை களை பிரபாகரகுருக்கள் நடத்தி வைத் தார். இந்த நிகழ்வில் சக்தி வழிபாடு என்ற தலைப்பில் ஆசிரியரும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான சிவ கஜேந்திரகுமார் சிறப்பு பொற்பொழிவு நிகழ்த்தினார். தொடர்ந்து மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர இவ் வருடம் நடைபெற்ற புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அரச உத்தியோகத்தர் களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். (ஓ-402)

**நிரந்தர தொழில் வாய்ப்பு**

கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜாம்/ரொபி/சொக்லேட்/பால்மா/நூடில்ஸ்/காமென்ட் கிளவுஸ் போன்ற வற்றிற்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் களஞ்சிய பிரிவுகளுக்கு 18 - 50 வயது ஆண்-பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 18000/=, 38000/= வரை தங்குமிடம், உணவு குறைந்த விலைகளில். வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

தொடர்பு: (52161) (12.3.6)
077 111 6770/077 683 8231

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கார் வாடகைக்கு** மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் கார் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 583 4770

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யாழ் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 187 புள்ளிகளையும் மாவட்ட மட்டத்தில் 12 ஆம் இடத்தினையும் பெற்றுசித்தியடைந்த யாழ்.கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த நிக்ஷன்-சுகன்யா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**றெக்ஸ் ஹரிஸ்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இறைவனின் ஆசியுடன் மேன்மேலும் சித்திகளைப் பெற்று கல்வியில் சிறந்து விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைகள், மச்சாள்.

தா.பாலசுந்தரம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(47301)(4.3.6)

**Future Green World (Pvt) Ltd.**
**எதிர்காலத்தில் பசுமை உலகம்**

E.mail : futuregreennp@gmail.com
web : www.green-lanka.com
Reg : PV 96207
Hot : 077 665 5433
Tel : 021 492 7400

இலங்கையின் முன்னணி நிறுவனமாக இயங்கும் எதிர்காலத்தில் பசுமை உலகம் நிறுவனமானது விவசாயம், மரவளர்ப்பு, விலங்கு வேளாண்மை, கைத்தொழில் ஆகிய துறைகளை ஊக்குவித்து வருகின்றது.

**சந்தன மரம் ஒரு சிறப்பான முதலீடாக இருப்பதற்கான காரணம்**

1) உலகின் உயர்ந்த வர்த்தகப் பெறுமதியைக் கொண்ட மரமாக இருத்தல்.
2) உள்நாட்டு மற்றும் உலக சந்தையில் மிகக் கூடுதலான கேள்வி காணப்படுகின்றமை.
3) சந்தன எண்ணெய்க்கான விலை உயர்வாகக் காணப்படுகின்றமை.
4) அறுவடையின் போது அதன் இலாபம் பல மடங்கு அதிகமாக இருக்கின்றமை.
5) சந்தனம் சார்ந்த உற்பத்திகள் உயர்ந்த விலைக்கு விற்பனையாகின்றமை.

ஒரு தொன் சந்தன மரத்தின் விலை 100,000 டொலர்
ஒரு கிலோ சந்தன மரத்தின் விலை 100 டொலர்
வருடாந்த விலை அதிகரிப்பு 22%

**சிறப்பு அம்சங்கள்**

- உங்களது நிலத்தில் நடுகை செய்து பராமரிக்கும் செயல்முறை
- வேளாண்மை பராமரிப்பு சம்பந்தமான தொழில் நிபுணரின் ஆலோசனை
- வனவள பாதுகாப்பு நிபுணர்களின் ஆலோசனை
- 6,000 இற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள்
- மூன்று ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட்ட இலவச மீள்நடுகை செயற்றிட்டம்

| நில பரப்பு | மரங்களின் எண்ணிக்கை | எதிர்பார்க்கப்படும் அறுவடைப் பெறுமதி | தற்போதைய முதலீடு |
|---|---|---|---|
| 1 பரப்பு | 20 சந்தன மரங்கள் | ரூபா 10,000,000.00 | ரூபா 24,000.00 |
| 4 பரப்பு | 80 சந்தன மரங்கள் | ரூபா 40,000,000.00 | ரூபா 96,000.00 |
| 8 பரப்பு | 160 சந்தன மரங்கள் | ரூபா 80,000,000.00 | ரூபா 192,000.00 |
| 12 பரப்பு | 240 சந்தன மரங்கள் | ரூபா 120,000,000.00 | ரூபா 288,000.00 |
| 16 பரப்பு | 320 சந்தன மரங்கள் | ரூபா 160,000,000.00 | ரூபா 384,000.00 |

**தலைமைக் காரியாலயம்**
இல. 13, கண்டி வீதி,
இரணைமடுச் சந்தி,
கிளிநொச்சி.
021 492 7407

**பிராந்திய காரியாலயம்**
இல. 133, கண்டி வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.
021 492 7400

**வாடிக்கையாளர் சேவை நிலையங்கள்**
- கிளிநொச்சி - 076 531 0420
- யாழ்ப்பாணம் - 076 531 0421
- முல்லைத்தீவு - 076 531 0422
- மன்னார் - 076 531 0423
- வவுனியா - 076 531 0424
- திருகோணமலை - 076 531 0425
- மட்டக்களப்பு - 076 531 0426

**குறிப்பு :**
எமது நிறுவனத்தினூடாக சந்தன மரக் கன்றுகளை கொள்வனவு செய்து நடுகை செய்த பின்னர் அக்கன்றுகள் பாதிப்புக்குள்ளாகியவர்கள் மீள்நடுகை திட்டத்திற்காக தங்களின் மரவிற்பனை படிவப் பிரதியுடன் அல்லது அதன் இலக்கத்துடன் 076 531 0421 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பயன்தரு மரங்களை நடுவதன் மூலம் சுபீட்சமான எதிர்காலத்தை அடைய முடியும்
நிபந்தனைக்குட்பட்டது.
(52895)(7.6.3)

**PLC**

**18 வருட லீசிங் துறையின் முன்னோடி**
**பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி**

TATA

dimo TECHNOLOGY
Expect Perfection

உங்கள் வெற்றிப்பாதையின் முன்னோடிகளான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் டிமோ நிறுவனம் இணைந்து வழங்கும் மிகச்சிறந்த அனுகூலங்களுடன் கூடிய வாகனக்கொள்வனவிற்கான இலகுபடுத்தப்பட்ட சேவைகள்.

- குறைந்த வட்டி வீதம்
- இலவச காப்புறுதி
- நெகிழ்வான தவணைக்கொடுப்பனவு
- தாங்கி நிறைய இலவச எரிபொருள்




பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
(மக்கள் வங்கியின் துணை நிறுவனம்)
இல.12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212228031
0212220187
தொலை நகல் : 0212229627

plc.lk

தொடர்புகளுக்கு...

யாழ்ப்பாணம் : ந.ச.விதுமன் - 0779797436
யூ.கெய்சர் - 0755461880
சாவகச்சேரி : க.சதீஸ் - 0775386232
மானிப்பாய் & பளை : ந.விஜயரூபன் - 0774694291
நெல்லியடி : ச.சிவரூபன் - 0779352771
சி.மயூரன் - 0773681466
பருத்தித்துறை : த.தர்ஷன்னா - 0771350074
சங்கானை : நி.கிரிஷாந் - 0771636284

இன்று முதல்

தீபாவளியை முன்னிட்டு
**மாபெரும்** அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40% வரையிலான விலைக்குறைப்புடன்



கண்ணாடி அலுமாரி ~~14750/=~~ 8950/=



Sofa ~~40400/=~~ 32320/=
(10 வருட உத்தரவாதம்)



மெத்தை ~~3620/=~~ 2170/=
(2 வருட உத்தரவாதம்)



கண்ணாடி சாப்பாட்டு மேசை ~~23560/=~~ 18125/=

மரக்கட்டில் ~~8250/=~~ 5900/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 630/=
TV Stand ~~4280/=~~ 2990/=

230, நாவலர் றோட்
(இலுப்பையடி சந்திக்கும் அத்தியடி சந்திக்கும் இடையில்)
(C/16713)(10.6.3) 077 35 83 879, 077 83 14 201

## மரண அறிவித்தல்

### இராசையா பத்மதேவன்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பத்மதேவன் நேற்று (04.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும், இலங்கேஸ்வரியின் அன்புக்கணவரும், திவ்யிக்கா, நிதுயிக்கா, டானுஜன், மிதுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இணுவில் கிழக்கு, இணுவில். (52876) (4.6.3) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சோமசுந்தரம்



காரைநகர், களபூமி, சந்திரந்தையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் 30.09.2014 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மீனாட்சி தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பமலர், சிறிகரன், வசீகரன் மற்றும் யோகமலர் (ஜேர்மனி), லோகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜேஸ்வரன் (ஜேர்மனி), துஷியந்தினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா மற்றும் பரமேஸ்வரி, பரமேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், செந்தூரான் (ஜேர்மனி), கௌசிகா, பார்த்திகா, பிரித்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/14, கூமாங்குளம், வவுனியா. (52881)(4.3.6)

தகவல்:
கனகலிங்கம் நாகேஸ்வரி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகனாதபிள்ளை யாதவராயர்

(இளைப்பாறிய ஆசிரியர்)



யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகனாதபிள்ளை யாதவராயர் 02.10.2014 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகனாதபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அருமை மகனும், மனோன்மணி (இளைப்பாறிய ஆசிரியை)யின் அருயிர்க் கணவரும் குணசீலன் (பிரித்தானியா), பத்மசீலன் (பிரித்தானியா), திருஞானசுந்தரம் (பிரித்தானியா), ஜெயசீலன் (பிரித்தானியா), சசிகலா (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் பார்வதிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற மக்களம் மற்றும் மருதையினார் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உருத்திரா (பிரித்தானியா), சாகரிக்கா (பிரித்தானியா),சிவபாலினி (பிரித்தானியா), யுதிஸ்ரிகா (பிரித்தானியா), சொரூபன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சண்முகம், பசுவதி, குழந்தைவேல், குணமணி, ஈஸ்வரி, வசந்தராணி, பரமேஸ்வரி, மங்களேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வீஷ்மன், விசாகன், வைஷ்ணவி, றிஷி, திவ்யா, ரமணான், ஹரிணி, ஹஷ்வினி, சுருதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-10,
ஆஸ்பத்திரி வீதி,
குடியிருப்பு, வவுனியா. (52160) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
024 222 1293

சிறுவர்களிற்கான
**கேம்பிரிட்ஜ் ஆங்கிலம்**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
0779866409
அலிசன் DIGILITE ADVANCE LEARNING PARTNER கொக்குவில் & இணுவில்

## விற்பனைக்கு/ குத்தகைக்கு

TATA 1615 லொறி உடன் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு Full body
தொடர்பு-077 818 6460
(52914)

## அறை வாடகைக்கு

K.K.S றோட் பூநாறி மரத்தடியில் மாணவர்கள் அல்லது உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு அறை வாடகைக்குண்டு.
(52902) T.P-075 731 9536

## தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிலையத்திற்கு
★A/L புவியியல், வணிகக் கல்வி, பொருளியல் பாடங்களுக்கான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை.
★எழுதுவினைஞர் (பெண்)
(யாழ். நகரிலிருந்து 2km எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)
தொடர்பு-0765529093
(52904)

USA 2016


DV Lottery
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத்திகதி 02.11.2014
திருமுருகன் கொம்நெற்
இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
பிரதான வீதி, சங்கானை.

## வாடகைக்கு வீடு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு-0770070209
(52903)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை.
தொடர்பு-076 688 2438
(52905)

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு இராயேந்திரன் என்பவருடைய தே.அ.அட்டை(531284029V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன பொற்பதி வீதிக்கும், யாழ்.நகர்ப் பகுதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (52850)(5.6.3)
தொடர்பு: 0777 737 072

## பெயர்மாற்றம்

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த றஞ்சிதபாமா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை ரேணுகா என பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
-ரேணுகா
(52847)(5.6.3)

## வீடு வாடகைக்குண்டு

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் லேனில், கோயில் வீதிக்கு அருகில் 4 அறை வீடு வாடகைக்கு உண்டு.
(சி16917)(12.3.6) தொடர்பு: 077 505 6271

## மரண அறிவித்தல்

### செல்வன் கருணாநிதி கோகுலகீதன்

(கிளி/இராமநாதபுரம் ம.வித்தியாலய மாணவன்)



இல 25, புதுக்காட்டை சேர்ந்த செல்வன் கருணாநிதி கொகுலகீதன் அவர்கள் (03.10.2014) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் கருணநிதி (முன்னாள் முகாமையாளர் கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) காலஞ்சென்ற தெவகி(செல்லக்கிளி) தம்பதிகளின் செல்வப் புதல்வனும், மயூரதன், காலஞ்சென்ற ஹரிரதன் மற்றும் பகீரதன், காலஞ்சென்ற பிரகலாதன் மற்றும் துர்க்கா, துர்ஷிகா(கிளி/இராமநாதபுரம் ம.வி-மாணவிகள்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாயவனூர் மம்மில் இந்து மயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, புதுக்காடு
இராமநாதபுரம். (52915)(08)

தகவல் :
மு.கருணாநிதி (அப்பா)
புங்குடுதீவு 10

## வீடு விற்பனைக்கு

அல்வாய் கிழக்கு, தெருமூடி மடத்தடிக்கு அருகில் தம்பசிட்டி வீதியில் வெள்ளிருவை வைரவர் கோயிலுக்கு அண்மையில் ஒன்றரைப் பரப்புக் காணிக்குள் புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: பிரபாகரன் 077 355 1047 (51951)(4.6.3)

## 31ஆம் நாள் நினைவலைகள்

### மேரி இராசமலர் எட்வின் கந்தசாமி




தோற்றம் 07.07.1946
மறைவு 05.09.2014

பண்புடனும் அன்புடனும் எமை வளர்த்த தாயே
மாண்பு நிறை குடும்ப வாழ்வில்
உனை உருக்கி எமை உருவாக்கினாய்.
இறைவிசுவாச வாழ்வின் இலக்கணமே!
நிறைகுடமே நித்திலமே...!
நினை இழந்து கதறுகின்றோம் நினைவிழந்து வாடுகின்றோம்.
மாதமொன்றென்ன காலத்தாலழியாததுன் நினைவு

இன்று (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் எம் குடும்பக் குலவிளக்கின் இறைவனின் கரங்களில் நித்திய இளைப்பாற்றிக்கான பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில். (52880)(5.6.3) குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்



### மாணிக்க தியாகராஜா தேவராஜா

(சுன்னாகம் சாயிசமித்தி முன்னாள் தலைவர்)

கடந்த 30.09.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தோருக்கும், மரணச்சடங்கில் கலந்து கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், மலர்வளையம் வழங்கியவர்களுக்கும், தொலைபேசி மூலமும், நேரடியாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நோயுற்று Jaffna Teaching Hospitalஇல் இருந்த வேளையில் சகல வழிகளிலும் உதவிய Consultant, Doctor, மற்றும் அனைத்து உதவியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி16910)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### வாய்ப்பை

கள் தலைமுறை வருத்தப்பட வேண்டி வரும் என்ற விடயத்தை நன்கு நினைவில் கொள்ளவேண்டும்.

மக்கள் பயந்திருந்த காலம் முடிவுக்கு வந்து விட்டது. இவ்வளவு கொடுமைகளையும் தாங்கி விட்டோம். இனிமேல் பயங்கொண்டு காப்பாற்றுவதற்கு மீதமென்ன இருக்கின்றது என்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டார்கள். எனவே அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், சட்டத்தரணிகள், தொழில் சார் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் தங்கள் கடமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.

சர்வதேச விசாரணைக்குரிய சாட்சியங்களை அதற்குரிய வழியில் அனுப்பி வைக்கவேண்டும். இதனை அனுப்பும் கடைசி நாள் இந்த மாதம் 31ஆம் திகதி மட்டுமே. இந்தச் சாட்சியங்கள் சத்தியக் கடதாசிகள் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில், காணாமற்போனோரின் விடயமும், அவர்களது உறவினர்களின் போராட்டங்களும் பிரத்தியேகமாகப் பதிவு செய்யப்பட வேண்டியவை. கைதுகள், துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்கள் கூட வாழ்க்கையில் பல்வேறு திருப்பங்களுக்கும், நெருக்குதல்களுக்கும் உள்ளாகி ஓரளவு மனம் தளர்ந்த காணாமற் போனோரின் உறவுகள் தங்கள் உறுதி குறையாமல் மேலும் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை கொடுமை இழைத்தவர்கள் அடையாளம் காணப்பட்டுத் தண்டனை வழங்கப்படவேண்டும். இதனை வேறு விதத்தில் கூற வேண்டுமாயின் பொறுப்புக் கூறும் கடமையும், கட்டளைச் சங்கிலியின் தொடர்ச்சியும் இனம் காணப்படவேண்டும் என்பதாகும்.

பொறுப்புக் கூறல் என்னும் கடமைக்கு இலங்கை அரசின் பதில் - அவ்வாறு ஒன்றுமே நடக்கவில்லை. பொதுமக்களுக்குப் பூச்சிய இழப்புக்களுடன் இது மனிதாபிமான அடிப்படையில் இடம்பெற்றதொன்றாகும்.

வடக்கு - கிழக்கில் பெரிய முன்னேற்றத் திட்டங்கள் நடைபெறுகின்றன என்று கூறிச் சர்வதேசத்தைத் திசை திருப்பும் முயற்சி நடைபெறுகின்றது. வடக்கு மாகாண சபை இவ்வாறான பிரசாரங்களுக்கு எடுபட்டு விடக் கூடாது. இது சாதாரண நிர்வாகப் பிரச்சினையோ முன்னேற்றத் திட்ட முனைவுகளோ அல்ல. இறுதியில் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய இனப்பிரச்சினையாகும்.

வெறுமனே பேச்சில் ஈடுபட்டு மூக்குடைபட்ட உதாரணங்கள் அண்மைய அரசியல் வரலாற்றில் உண்டு. அரசின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கியோ, அண்டை நாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியோ பேச்சு என்ற கானல் நீரில் மூழ்குவதும், பொறுப்புக் கூறல் என்ற அடிப்படைக் கோரிக்கையிலிருந்து விலகுவதும், தமிழ் இனத்துக்கு இழைக்கப்படுகின்ற மாபெரும் துரோகம் - என்றார் அவர். (த-5)

### தலைமன்னார்

லாளர்கள் இந்தியத் துணைத் தூதரகத்தினால் கடந்த வாரம் அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது யாழ்.ரில்கோ விடுதியில் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு மேற்கொண்ட அவர் மேலும் தெரிவிக்கும் போது,

650 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் ரயில் பாதையை இந்திய அரசு புனரமைப்புச் செய்து வருகிறது. பளையில் இருந்து காங்கேசன்துறைக்கான 62 கிலோ மீற்றர் ரயில் பாதைப் புனரமைப்புக்கென 150 மில்லியன் அமெரிக்க டொலர் ரூபா செல விடப்பட்டுள்ளது.;

புனரமைப்புப் பணிகள்யாவும் இந்தியத்தொழில் நுட்ப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு மணி நேரத்தில் சுமார் 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய வகையில் பாதை புனரமைப்பு இடம்பெற்றுள்ளது. எம்மால் தண்டவாளத்துக்கு முழுவதும் கொக்ரீட் கற்கள் பாவிக்கப்பட்டுள்ளதால் 60 வருடத்துக்கு அது நிலைத்து நிற்கும்.

பளையில் இருந்து காங்கேசன்துறை வரை பிரதானமாகக் கொடிகாமம், சாவகச்சேரி,நாவற்குழி, யாழ்ப்பாணம், கோண்டாவில், சுன்னாகம்,காங்கேசன்துறை ஆகிய இடங்களில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட எழுதுமட்டுவாழ், மிருசுவில், மீசாலை, சங்கானை, தச்சன்தோப்பு, புங்கன்குளம்,கச்சேரி, கொக்குவில், இணுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் உப நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வரையான புனரமைப்புப் பணிகள் 80 வீதமே பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 20 வீதமான பணிகள் முடிவடையவில்லை. இதற்குக் காரணம் உயர் பாதுகாப்பு வலயத்தில் சுமார் 4 கிலோ மீற்றர் பாதையை இராணுவம் அண்மையில் தான் கையளித்துள்ளது. எனினும் இந்த வருட இறுதிக்குள் அதனை முடிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதனைவிட மன்னார் மடுவுக்கான ரயில் சேவை இடம்பெற்று வரும் நிலையில் இந்த மாதம் இறுதிக்குள் திருக்கேதீஸ்வரம் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஏற்ப பணிகள் இடம்பெற்று வருகின்றன. வட பகுதிக்கான ரயில் சேவைகள் அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் நடைபெறும். அடுத்த வருடம் தலைமன்னார்- இராமேஸ்வரத்துக்கான கப்பல் சேவையும் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ள இந்தக் கடனுதவியை இலங்கை அரசு 60 வீதத்தை மட்டுமே 20 வருட ஒப்பந்தத்தில் திருப்பி செலுத்த வேண்டும். மற்றைய நாடுகள் இவ்வாறான ஒரு கடனுதவியில் வழங்கியதில்லை. வடக்கு மக்கள் போரினால் பாதிப்படைந்திருப்பதால் இந்தியா இந்த உதவியை வழங்கியுள்ளது.

அத்துடன் ஓமந்தை- கொழும்புக்கு இடையிலான ரயில் பாதைகள் காலங்கடந்த சிலிப்பர் கட்டைகள் பாவிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருப்பதால் அதனைப் புதிதாக அமைத்துக் கொடுக்க இந்திய அரசு இலங்கையிடம் யோசனை முன்வைத்துள்ளது. அத்துடன் நிலத்துக்கு கீழ் சுரங்கப் பாதையை அமைக்க 3 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும். அதற்கான முயற்சிகள் வாய்ப்பளிக்கும்.இதற்கான யோசனை ஒன்றை இந்தியா முன்வைத்துள்ளது. எனினும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை -என்றார். (த-14)

### நீதிமன்ற

சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

மன்னார் வங்காலை கடற்படை முகாமிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி சடலம் ஒன்று உருக் குலைந்த நிலையில் கரை யொதுங்கியது. குறித்த சடலத் தைப் பார்வையிட்டு மரண விசாரணைகளை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி தே.பி. சிந்தாத்துரை, அதனை அடையாளம் காண்பதற்காக மன்னார் வைத்தியசாலை யின் பிரேத அறையில் இரண்டு வாரங்களுக்கு வைக்குமாறும், அடையாளம் காணாதுவிட்டால் பிரேத பரிசோதனையின் பின் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டார். அதேவேளை, மன்னார் சௌத்பார் கடற்கரைப் பகுதியில் கடந்த 15 ஆம் உருக் குலைந்த நிலையில் மற்றொரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த சடலத்தை பார்வையிட்ட மரண விசாரணை அதிகாரி, அதனையும் அடையாளம் காண்பதற்காக இரு வாரங்களுக்கு மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்குமாறும், அடையாளம் காணாவிட்டால் பிரேத பரிசோதனையின் பின் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் வங்காலைக் கடற்கரையில் கடந்த 3ஆம் திகதி மீட்கப்பட்ட சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்ட பின் கடந்த 24 ஆம் திகதி அரச செலவில் அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் குறித்த சடலம் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதும் அதற்குப் பதிலாக பின்னர் மன்னார் சௌத்பார் கடற்கரையில் மீட்கப்பட்ட சடலம் அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

மன்னார் சௌத்பார் கடற்கரைப் பகுதியில் மீட்கப்பட்ட சடலத்தைப் பிரேதப் பரிசோதனை செய்து அரச செலவில் புதைப்பதற்கு கடந்த 29ஆம் திகதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது குறித்த சடலம் மாறி புதைக்கப்பட்ட சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது.

இது தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், குறித்த சடலம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 2 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், குறித்த சடலத்தை நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் நேற்று சனிக்கிழமை தோண்டி எடுத்துப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து நீதிவானின் உத்தரவுக்கு அமைவாகக் குறித்த சடலம் நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பொது மயானத்தில் மன்னார் நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி என். ஐ.வி.இருசானா ஆகியோர் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

இதன்போது மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வி.ரூபன் லெம்பேட், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரஜனி அன்ரன் சிசில் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் குறித்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

விசேட குற்றவியல் ஆய்வுப் பிரிவுப் பொலிஸார் மற்றும் பணியாளர்கள் இணைந்து குறித்த சடலத்தை நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுத்த்னர். (த-56)

### தங்கக்

இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

களவாடப்பட்ட நகைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாரால் நகைக்கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. வாடிக்கையாளரால் விற்பனைக்குக் கொண்டு வரப்படும் நகைகள் களவாடப்பட்ட நகையா அல்லது அவர்களின் சொந்த நகையா என்று உரிமையாளர்களால் எவ்வாறு இனங்காண முடியும். எனவே கடை உரிமையாளர்கள் நகைகளை வாங்கும் போது அடையாள அட்டையைப் பெற்று பற்றுசீட்டில் அவரது கையொப்பத்தையும் பெற்றால் பின்னர் வரப்போகும் பிரச்சினைகளை இனம் காண முடியும்.

இவ்வாறு எந்தவித ஆவணங்களும் இல்லாமல் நகைகளை வாங்கும்போது திருட்டுக்களுடன் தொடர்புடையவர்களுக்கும் நகைக்கடை உரிமையாளர்களுக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தப் பிரச்சினை தொடர்பில் அடுத்த வாரம் பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து கலந்துரையாடல் செய்து முடிவு எடுக்கப்படும். என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கடை உரிமையாளர்கள் தான் முடிவு எடுக்க வேண்டும்.

அத்துடன் இந்தியாவுக்குத் தங்கம் கடத்துவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் இங்குள்ள கடை உரிமையாளர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். மறைமுகமாக அவ்வாறான தொடர்புகளில் இருந்தால் அதனைக் கைவிட்டு எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் - என்றார். (த-14)

### வந்தது

கடற்படையினரிடம் கைமாறியது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வடதாரகை கடற்படையினரின் பயன்பாட்டுக்குப் போய்ச் சேர்ந்தது.

இது தொடர்பில் பல தரப்பினராலும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் இருந்தது. ஆனாலும் மக்கள் பயன்பாட்டுக்காக வராமல் வடதாரகை கடற்படையினரிடமே இருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். அத்துடன் மறுநாள் 14 ஆம் திகதி நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்குச் செல்லும் ஜனாதிபதி, அங்கு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், ஒளிந்திருந்த வடதாரகை திடீரென நேற்றையதினம் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இது தொடர்பில் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் வர்ண குல சூரியவிடம் கேட்டபோது, குறித்த வடதாரகைப் படகு, திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டிருந்ததாகவும், தற்போது மக்களுக்கு இலவச பயண சேவையை வழங்குவதற்காக வந்துள்ளதாகவும் தெரிவித்தார். (த-5)

### அரசியலை

திர்ஷ்டமாக, தலைமை ஏற்பவர்கள் எல்லோருமே சட்டத்துக்குள்ளேயே அரசியலை முன்வைக்கின்றனர். அரசியலை அரசியாலாகவே பார்க்க வேண்டும். சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அதனடிப்படையில் பின்பற்றுகின்ற அரசியலை முன்னெடுக்கக்கூடாது.

எமது தலைமைகள் அரசியலுக்குள்ளேயே சட்டம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு, அரசியலை அரசியலாகவே முன்னெடுக்க வேண்டும். குமார் பொன்னம்பலம் ஒரு சட்டத் தரணியாக இருந்தாலும், அரசியலை அரசியலாகவே பார்த்தவர்.

மேலும் மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்கக்கூடாது. நாம் நீதிமன்றத்தை நாடுவதன் ஊடாக எமக்கு முழுமையான தீர்வு கிடைத்துவிடாது. நீதிமன்றத்துக்குச் செல்வதன் ஊடாக எமது மக்களின் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டுவிடும் - என்றார் அவர். (த-5)

### மாதகலில்

இந்த 45 கிலோ தங்கக் கட்டிகளும் யாழ்.சுங்கத் திணைக்களத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

இதற்காக யாழ்.பிரதம தபாலக வளாகத்தைச் சுற்றிக் கடந்த இரண்டு நாள்களாகக் கடற்படையினர் இரவு பகலாகத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் இந்த 45 கிலோ தங்கக் கட்டிகளும் சுங்க அதிகாரிகளினால் நேற்றுப் பலத்த பாதுகாப்புடன் விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அத்துடன் தங்கக் கட்டிகளை இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட படகு யாழ்.பிரதம தபாலக வளவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. (த-17)

### இலங்கையின்

விப்பதற்காவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹெரி சந்தித்தாகவும் குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், பாப்பரசரைச் சந்திப்பதற்காக இத்தாலி சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இத்தாலியிலுள்ள இலங்கையரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் போதே அவர் சர்வதேசத் தலையீடு தொடர்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சில நாடுகள் இலங்கையில் ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளை மீள ஒருங்கிணையச் செய்ய ஊக்கமளிப்பதே இந்த நாடுகளின் நோக்கமாக அமைந்துள்ளது. உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை. வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கை மக்கள் நாட்டுக்கு எதிரான போலிப் பிரசாரங்களை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.

தமது ஆட்சிக் காலத்திலேயே அதிகளவு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் நாட்டின் ஜனநாயகப் பலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

### மிதிவெடியில்

இரும்புகள் பொறுக்குவதற்காகச் சென்றபோது இவர் மிதிவெடியில் சிக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாலாவி வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த ஹலோ ரஸ்ட் பணியாளரான டி.நாதன் (வயது-33) என்பவரே மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்தார். காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

### டெல்றொக்ஷனின்

தலை செய்வதற்கான அமைப்பின் தலைவர் வழக்குரைஞர் நாமல் ராஜபக்ஷ, இந்தச் சிறை மோதலின்போது பொலிஸ் அதிரடிப் படையினர் பயன்படுத்தப்பட்டதாகவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார்.

கலவரம் ஒன்றை முறியடிக்க முன்னர் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் எதுவும் இதன்போது பின்பற்றப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

குறித்த கைதி, சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் முடிவுக்கு வந்த பின்னர் கொல்லப்பட்டதாகவே தமக்கு தகவல் கிடைத்துள்ளதென்றும் வழக்குரைஞர் நாமல் ராஜபக்ஷ கூறினார்.

மனுதாரர்கள் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுவை தொடர்ந்து விசாரிப்பதற்கு அனுமதி அளித்தனர். இதன்படி, வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அன்றையதினம், இந்த மனு தொடர்பான விளக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, இந்த சம்பவத்தின்போது கொல்லப்பட்ட கணேசன் நிமலருபன் என்ற கைதியின் மரணம் தொடர்பில் தாக்கல்செய்யப்பட்ட மனுவொன்றை விசாரணையின்றி தள்ளுபடி செய்வதற்கு உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்மானித்தது. இந்தத் தீர்ப்பை வழங்கிய தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ், கலவரமொன்றை அடக்கும் போது இவ்வாறான் உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இதன்போது மனித உரிமைகள் மீறப்பட மாட்டாது என்றும் தலைமை நீதியரசர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# தொடர்கிறது பதக்க வேட்டை

யாழ்ப்பாணம்,ஒக்.5
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் வடமாகாணம் சார்பாக பதக்கங்கள் குவிந்து வருகின்றன.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம் பெற்று வரும் தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டிகள் நேற்று சனிக்கிழமையும் நடைபெற்றன. இதில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி பவித்திரா கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை படைத்தார். 21 வயது பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3.17 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்த பவித்திரா, 2012 ஆம் ஆண்டு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி தனுஷா 3.11 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து நிலைநாட்டிய சாதனையை முறியடித்ததுடன் முதலிடத்தைப் பெற்று தங்கத்தையும் வென்றார்.

அதே பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி மேரி பௌஸ்தினா 2.85 மீற்றர் உயரத்தினை பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினையும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவி டன்சிகா 2.55 மீற்றர் உயரத்தினை பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றி பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் நெய்தலியோயிசன் 3.90 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், மகாஜனக்கல்லூரி மாணவன் டிலக்சன் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும், மகாஜனாக் கல்லூரிமாணவன் டினேஸ் 3.65 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து நான்காமிடத்தைப் பெற்று வர்ண விருதையும் பெற்றனர்.


பவித்திரா றஜிதா

21 வயது பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவி றஜிதா பாலச்சந்திரன் 36.64 மீற்றர் தூரம் எறிந்து முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை தனதாக்கிகொண்டார்.

அத்தோடு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி வரலாற்றில் தேசியமட்ட தடகளப்போட்டியில் முதலிடம் பெற்றது இதுவே முதல் தடவையாகும்

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஈட்டிஎறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் மதுரன் 48.65 மீற்றர் தூரம் எறிந்து முதலிடத்தைப் பெற்று தங்கத்தையும், 21வயதுப்பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் யஸ்மினன் 6.96 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாமிடத்தைப்பெற்றுவெள்ளிப் பதக்கத்தையும் பெற்றார்.
(ரி- 23 - 21)

## கண்ணீர் அஞ்சலி



**ஜெனார்த்தனன் அச்சுதன்**
(A/L2012ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

அவர்களின் மரணச் செய்திகேட்டு துயருறுகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்துக் கல்லூரி
A/L 2012 ஆம் ஆண்டு பழைய மாணவர்கள். (சி/16775) (10)

## மரண அறிவித்தல்

'விஷ்வப் பிரம்மனே நமஹ'
**திருமதி தெய்வநாயகி தில்லைநாயகம்**

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி தில்லைநாயகம் நேற்று (04.10.2014) சனிக்கிழமை காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, K.K.S. வீதி,
சுன்னாகம். (52923)(10)
தகவல் :
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

திரு கனகசுந்தரம் வசந்தகுமார் ஆகியவரது அலுவலகப்பை (கறுப்பு) (04.10.2014)நேற்று காலை பளை புகையிரத நிலையத்தில் தவறவிடப்பட்டுள்ளது. இதனுள் அலுவலக முக்கிய ஆவணங்கள் (laptop,Phone, வங்கி அட்டைகள்) உள்ளதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிக்கு தெரியப்டுத்தவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொலைபேசி : 0775361365
(52918)

## மரண அறிவித்தல்

**அரியகுட்டி சின்னப்பிள்ளை**



கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி சின்னப்பிள்ளை (2.10.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அரியகுட்டியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வைகுந்தரின் அன்பு சகோதரியும் கமலாதேவி(சுவிஸ்), நவமணிதேவி, லங்காதேவி, காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் சகுந்தலாதேவி, பூமாதேவி(சுவிஸ்), உமாதேவி(சுவிஸ்), தெய்வநாயகி(சுவிஸ்), வள்ளிநாயகி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2014) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபீபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-0777452506
(சிவபாலன்) (52929)(08)
தகவல் :
குடும்பத்தினர்.

# நவஜீவன்ஸ், டைமன்ஸ் அணிகள் அபார வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.5
எதிரணிகளை அதிக கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய உடுப் பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழகம் மற்றும் வதிரி டைமன்ஸ் விளையாட்டுகழகம் என்பன அபார வெற்றியீட் டின.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண் டது. இதில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ரி- 23)

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி



விசுவமடு தோழர்கள் விளை யாட்டுக்கழகத்தின் 21 ஆம் ஆண்டு நிறைவையொட்டி விசுவமடு மகா வித்தியால யத்தின் பழைய மாணவர்களின் அனுசரனையோடு அணிக்கு 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணி கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி)

## விற்பனைக்கு

LB xxxx இலக்கம் கொண்ட Full body 250 இசுசு விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 0776237956
(52919)

## கடை வாடகைக்கு

பருத்தித்துறையில் மீன் சந்தைக்கு அருகில் கடைவாடகைக்கு உண்டு.
தொடர்பு : 0777320296
(c:16774)08

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.5
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இட்ம்பெற்று வருகின்றன. இன்று ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு இடம்பெறும் லீக் ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.5
மன்னார் மாவட்டதில் திறமையான கிரிக்கெட் வீரர்களை இனம்காணும் முகமாக மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான 30 பந்துப் பரிமற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் மன்னார் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் றோயல் அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.5
வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நாம் நண்பரகள் அமைப்பு நடத்தும் மென்பந்துச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ரி)

* * *

கரணவாய்,ஒக்.5
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு : பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.
(ரி - 108)

## மரண அறிவித்தல்



**நவநீதம் ஜீவகாந்தன்**

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவநீதம் ஜீவகாந்தன் நேற்று (04.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவநீதம் -சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம்-சரஸ் வதி தம்பதியரின் மூத்த மருமகனும் யசோதாதேவியின் அன்புக்கணவரும் முகுந்தன், லாவன்னியா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்பாலனின் அன்பு மாமனாரும் டிவ்யன், அக்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/7 K.K.S றோட்,
யாழ்ப்பாணம்
தகவல் : யசோ(ராணி)
தொ.பே: 021 222 0658

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி குகதாசன் லிகிர்தா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பவளம் துரைராசா**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், உடுவில் .
பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும். (சி/16773)(10)

# ரெய்னா ருத்ர தாண்டவம் பொசுங்கியது கொல்கத்தா

## சம்பியனானது சென்னை சுப்பர் கிங்ஸ்

ரெய்னாவின் அதிரடியான துடுப்பாட்டம், நெகியின் மாயா ஜால சுழல் பந்து வீச்சும் கை கொடுக்க சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 8 இலக்குகளால் கொல்கத்தாவை வீழ்த்தி சம்பியன் லீக் தொடரில் இரண்டாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்தது சென்னை.

நாணயச் சுழற்சியிலே வெற்றி பெற்று ஆட்டத்தை வெற்றியுடன் தொடங்கிய சென்னை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. ஐ.பி.எல் நடப்புச் சம்பியன், 14 ஆட்டங்கள் தொடர்ச் சியாக யாராலும் தோற்கடிக் கப்பட முடியாத அணி என்ற அருமை, பெருமைகளுடன் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு தொடக்க வீரர் கள் உத்தப்பா, கம்பீர் ஜோடி அசத்தலான தொடக்கத்தைக் கொடுத்தது. இவர்களின் அதிரடியில் பந்துகள் எல்லைகளை தாண்ட, சென்னை வீரர்களதும் ரசிகர்களதும் முகம் சோர்வடைய ஆரம்பித்தது. அணி 10.5 ஓவர்களில் 91 ஓட்டங்களைப் பெற்றிருக்க 32 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்ற உத்தப்பா, நெகியின் பந்தில் 'ஸ்டம்ப்' செய்யப்பட்டார். அத்துடன் கொல்கத்தாவின் சம்பியன் கனவில் புயல் வீசத் தொடங்கியது. களம் புகுந்த கலிஸ் வந்த வேகத்திலேயே ஒரு ஓட்டத்துடன் நெகியினால் திருப்பி அனுப்பப்பட்டார். உள்ளே வந்த மனிஸ் பான்டே அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த கம்பீருக்கு கை கொடுத்தார். இவர்களது இணைப் பாட்டத்தைப் பயன்படுத்தி கொல்கத்தா மீண்டெழ முயன்றது. ஆனால் 52 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களைக் குவித்த கம்பீரை ஜடேஜா தனது சுழலில் சிக்க வைத்தார். தொடர்ந்து இலக்குகள் சரிக்கப்பட கொல்கத்தா எதிர்பார்த்த நிலைமையை விட மிகவும் மோசமாக ஆனது. ஆனாலும் நெக்ரா வீசிய இறுதி ஓவரில் பந்துகளை விளாசித் தள்ளிய யூசுப் பதானின் உதவியுடன் 19 ஓட்டங்களைப் பெற்ற கொல்கத்தா வலுவான இலக்கை நிர்ணயித்தது. 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்த அந்த அணி 180 ஓட்டங்களை குவித்தது. மனிஸ் பான்டே 19 பந்துகளில் தலா 2 சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்க 32 ஓட்டங்களையும், யூசுப் பதான் 9 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பவான் நெகி 4 ஓவர்களை வீசி 22 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தினார்.



பவான் நெகி



180 எனும் இமாலய இலக்கைத் துரத்திய சென்னைக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி வைத்தியம் அளித்தது கொல்கத்தா. சென்னையின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர்களில் ஒருவரான டுவைன் ஸிமித்தை 8 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பினர். கொல்கத்தா அணியினர் வெற்றிக்களிப்பில் துள்ளிக் குதிக்க சென்னை ரசிகர்கள் தோல்வி அச்சத்தில் மூழ்கினர். ஐ.பி.எல் அரையிறுதியில் பஞ்சாப்பிடம் வீணாகிய அதிரடியின் மிகுதியை சேர்த்து வைத்துக் களமிறங்கினார் ரெய்னா. மக்கலம் வழமைக்கு மாறாக அடக்கி வாசிக்க, ரெய்னா அதிரடியாக ஆடினார். 30 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்ற மக்கலம் பதான் பந்தில் வெளியேற துடுப்பாட்ட வரிசையை மாற்றி முன்தாகவே களமிறங்கினார் அணித் தலைவர் டோனி.



சுரேஷ் ரெய்னா

ரெய்னாவை வேடிக்கை காட்டவிட்டு, டோனி மறுமுனையில் இலக்குகளை சரியவிடாமல் காத்துக் கொண்டிருந்தார். 17.1 ஆவது ஓவரில் சாவ்லா பந்தில் 59 பந்துகளில் சதம் கடந்தார் ரெய்னா. ஏற்கனவே ஒரு ஸ்டம்பிங்கிலும், ஒரு பிடியெடுப்பிலும் தப்பிப் பிழைத்த ரெய்னா தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை அருமையாகவே பயன்படுத்தினார். இரண்டு ஓவர்களில் வெற்றிக்கு மேலும் 8 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 19 ஆவது ஓவரை எதிர்கொண்ட டோனி முதலாவது மற்றும் மூன்றாவது பந்துகளை வானுயர் சிக்ஸர்களுக்கு விளாசினார். இதன் மூலம் 18.3 ஓவர்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை தொட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 இலக்குகளால் ஆட்டத்தை வென்று 2014 ஆம் ஆண்டின் சம்பியன் லீக் ரி-20 வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் ரெய்னா 62 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 109 ஓட்டங்களையும், டோனி 14 பந்துகளில் 2 சிக்ஸர்கள் ஒரு பவுண்டரி அடங்கலாக 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக, கொல்கத்தாவின் இலக்குகளை தனிமனிதனாக வேட்டையாடி ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய பவான் நெகி தெரிவானார். தொடர்நாயகனாகத் தெரிவான சுரேஸ் ரெய்னா, தொடரில் அதிகூடிய ஓட்டங்களாக 210 ஓட்டங்களைக் குவித்து தங்கத் துடுப்பையும், அதிகூடிய இலக்குகளை வீழ்த்திய சுனில் நரேன் தங்க இலக்குகளையும் வென்றனர்.

(ரி)

## மெஸ்சிக்கு சிறை ?



வரி செல்லுத்தாத வழக்கில் ஆர்ஜென்ரினா உதை பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ் சிக்கு குறைந்தது ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எந் தெரியவருகிறது.

கடந்த 2007- 09ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் வரிப் பணத்தை செலுத்தாமை தொடர்பாக லியோனல் மெஸ்சி மீதும், அவரது தந்தை ஜார்ஜ் மெஸ்சி மீதும் குற்றச்சாட்டு எழுந்தது. இவர்கள் இருவரும் பெலிஸ், உருகுவே போன்ற அயல்நாட்டு நிறுவனங்களுக்கு மெஸ்சியின் புகைப்படத்தை பயன்படுத்தும் உரிமையை விற்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு செய்வதன்மூலம் அவர் கள் ஸ்பெயினில் 4 மில்லியன் யூரோவிற்கு மேல் வரி செலுத்தாமல் தவிர்த்து வந்தனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது குறித்து நடைபெற்ற வழக்கில், தனது நிதி விவகாரங்களை தந்தைதான் கவனித்து வருவதால் தன்னை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று மெஸ்சி நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டார். ஆனால் தவறு நடந்திருப்பதை அறிந்துகொள்ள நிதி நிர்வாகியாக இருக்க தேவையில்லை என்று கூறிய நீதிபதி, வழக்கில் இருந்து மெஸ்சியை விடுவிக்க முடியாது என்று உத்தரவிட்டுள்ளார். எனவே மெஸ் சியும் இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ளதால், அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அபராதத் தொகையுடன், ஆறு ஆண்டு சிறைத்தண்டனையை மெஸ்ஸி அனுபவிக்க நேரிடும் என்று தெரிவிக் கிப்படுகிறது.

(ரி)

## விற்பனைக்கு/குத்தகைக்கு

- Lanka ashok Leyland (E.comet) - 2010ஆம் ஆண்டு Model லொறி Container (கெண்டைனர்)
- Ceyband Engine (எஞ்சின்) with SKV ஜெனரேற்றர்.
- Concrete Mixture (கொங்கிறீற் மிக்சர்) ஒரு சிமெந்து பைக்கற்.
- மொபைல் போன் விற்பனை நிலையம் வாடகைக்கு விடப்படும். பொருள்களுடன் (கிளிநொச்சி)

(52798) (12.3.6)

தொடர்பு: **077 233 0790**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், கே.கே.எஸ் வீதியில் பிரதேச சபைக்கு முன்பாக 2ஆவது காணி 6½ பரப்பு விற்பனைக்கு உண்டு.

(52862) (7.6.3)

தொடர்பு: 077 550 4438

## லக்ஸ்மி ஸ்பீட் சேவிஸ்

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் சேவைகள் குறைந்த கட்டணத்தில் யாழ்ப்பாணம் ⇌ கொழும்பு, மாவட்டங்களுக்கான பொதிகள் சேவைகள். (உங்கள் வீடுகளில் வந்து பார்சல்கள் பெற்றுக் கொள்ளப்படும்)

118, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். T.P : 076 625 5093

(சி/16733)(7.6.3)

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு மின்னியல் மற்றும் இயந்திரவியல் (Electrical, Mechanical) துறையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. இத்துறையில் குறைந்த பட்சம் மூன்று வருட முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுடையோர் 20.10.2014இற்கு முன் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 5019
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/16757) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து, 1987, அச்சுவினி கொழும்பு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு வெளிநாட்டு PR உடைய மணமகள் தேவை.

தொடர்பு: 077 108 4611

(52848) (7.6.3)

## உடனடி பயணம் — இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

சவூதி இராச்சியத்தில் பிரசித்தி பெற்ற கம்பனியில் உடனடி வேலை வாய்ப்புகள்

**இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!!**

பதிவுக்கட்டணம் இலவசம் · உணவு இலவசம் · விமான டிக்கட் இலவசம்

| பதவி | தொகை | சம்பளம் (றியால்) | சம்பளம் (ரூபா) |
|---|---|---|---|
| 01 கட்டிடம் பெயின்டர்ஸ் | 25 | 1600 | 56,000 |
| 02 பிலாஸ்டர் மேசன் | 35 | 1600 | 56,000 |
| 03 புலொக் மேசன் | 25 | 1600 | 56,000 |
| 04 டைல்ஸ் மேசன் | 25 | 1600 | 56,000 |
| 05 தச்சன் | 25 | 1600 | 56,000 |
| 06 போமன் | 25 | 1600 | 56,000 |
| 07 பிளம்பர்ஸ் | 10 | 1600 | 56,000 |
| 08 கம்பி கட்டுனர் | 10 | 1600 | 56,000 |
| 09 ஷடரின் கார்பெண்டர்ஸ் | 05 | 1600 | 56,000 |
| 10 லேபர்ஸ் | 45 | 900 | 31,000 |

- ★ ஒப்பந்தகாலம் 2 வருடங்கள், தங்குமிடம், போக்குவரத்து மற்றும் வைத்தியவசதி இலவசம்.
- ★ ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் ★ கிழமைக்கு 6 நாட்கள் ★ காப்புறுதி மற்றும் அனைத்து நிபந்தனைகளும் சவூதி இராச்சியத்தில் தொழிலாளர் சட்டத்திற்கு இணங்க வழங்கப்படும்.
- ★ ஒவ்வொரு வருடமும் இறுதியில் சம்பளத்தோடு 30 நாள் விடுமுறை. ★ ஒப்பந்த கால முடிவில் விமானப்பயணம் இலவசம்(சாப்பாடு கட்டணம் 200 றியால் (ரூபா 7,000) வழங்கப்படும்).

வங்கிக்கடன் பெறுவதற்கு உதவிகள் செய்து தரப்படும்.

SLBFE Reg No 969

### அரபியன் கல்ப் என்டபிரைசஸ்


இல. 72/26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொழில் நுட்பக் கல்லூரியின் சந்தியிலிருந்து, பன்சிக்காவத்தை பக்கத்திற்கு மெடி ஹவுஸ் கட்டிடத்தைக் கடந்து 50 மீட்டர் தொலைவில் உள்ளது.
உடனடித் தொடர்புகளுக்காக: சர்மா - 077 255 8311, 077 401 8552, 072 228 5405

(52906)

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னம்பலம் சிவதாஸ்

(சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் யாழ் மாவட்டம்)



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச நிலஅளவைக் காரியாலயம்
யாழ்ப்பாணம்.

(C/16747)(7.6.3)

## மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2014, ஒக்ரோபர்
## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 15 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்


- Civil Engineering
- Biomedical Science
- Quantity Surveying
- Computing & System Development
- Business Management
- Business Marketing
- HR Management

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

  க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

  Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

  நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

  Concept of, Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

  சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS — BRITISH COLLEGE OF APPLIED STUDIES — JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
**077 710 2131**
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS



# Study In Latvia

Schengen visa
**WITH WORK PERMISSION**

13th Oct. 2014

மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்

**SPOT ADMISSION**
**2nd TIME IN COLOMBO**

VENUE **EXPONET COLOMBO**

- ► எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- ► IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- ► Sehengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- ► UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்
- ► ஒரு வருடத்திற்கான கட்டணமாக Rs. 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- ► 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி

**கொழும்பு மற்றும் யாழ். கிளையினூடாக முற்றிலும் இலவசமாக Latvia Studen Visa தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.**

EXPONET Overseas Consultants
www.expogroup.lk

No. 379-1/2 Galle Road, Col -06.
**Hotline: 011 7555511/14/18**
E-mail: nimal@expogroup.lk

# 197, Arasady Road, Jaffna.
**021 7538395 / 021 2227230**

Jaff Ads 0775011160

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.